ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”—திருவள்ளுவர்

(*All Rights Reserved.*)

| | | |
|---|---|---|
| தொகுதி 2 | நள ௵ ஐப்பசி ௴ 1௳<br>1916-ம் ௵ அக்டோபர் ௴ 16௳ | பகுதி 4 |

## கடவுள் வணக்கம்

ஏக மானவுரு வான நீயருளினு
லனேகவுரு வாகியே
யெந்த நாளகில கோடி சிருஷ்டிசெய
லிசையு நாள்வரைய நாண்முத
லாக நாளது வரைக்கு முன்னடிமை
கூடவே ஜனன மானதோ
வனந்த முண்டுநல சனன மீதிதனு
ளறிய வேண்டுவன வறியலா
மோக மாதிதரு பாச மானதை
யறிந்து விட்டுனையு மெனையுமே
முழுது ணர்ந்துபர மான வின்பவெள
மூழ்க வேண்டுமிது வின்றியே
தேகமே நழுவி நானுமோ நழுவிற்
பின்னை யுய்யும்வகை யுள்ளதோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

---

“ அத்த னேயகண் டானந்த னேயருட்
சுத்த னேயென வுன்னைத் தொடர்ந்திலேன்
மத்த னேன்பெறு மாமல மாயவான்
கத்த னேகல்வி யாதது கற்கவே.”

---

“ கண்ணிற் காண்பதுன் காட்சிகை யாற்றொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ண லேநின் னருள்வடி வாகுமே ”

ஆனந்தபோதினி

ஙள௵ ஐப்பசிமீ 1௳

## மெய்ஞ்ஞானி.

மெய்ஞ்ஞானி என்றால் மெய்யை, அதாவது உண்மை யின்ன தென்பதை யறிந்த ஞானி, சத்தியம் இன்னது என்பதை யுணர்ந்த ஞானி என்று பொருள். உண்மையான ஞானி யென்றும் பொருள் படும். உண்மையான ஞானி யெனின் பொய்யான ஞானி யென்று ஒன்றுண்டோவெனின் உண்டென்றே சொல்லத்தகும். அதிலும் இக்காலத்தில் அதிகமென்று கூறலாம். ஞான அனுபவம் எள்ளளவு மின்றி நான் ஞானியென்றும் துறவி யென்றும் கூறிக்கொண்டு அனேகர் பாமர ஜனங்களை ஏமாற்றிப் பொருள் பறிக்கிறார்கள்; சிலர் யாதொரு கஷ்டமுமின்றி வயிறு வளர்க்க அம்மாதிரி வேடம் பூண்டு திரிகின்றனர். நியாயப்படி யொருவன் சந்நியாசி யாசிரமத்தைப் பெறவேண்டுமாயின் அதற்குத்தகுதியுடைய ஒரு பெரியோரிடமே அவன் அதைப பெறவேண்டும். அவர் அவனிடம் அதற்குத்தக்க யோக்கியதை யிருக்கிறதாவென்று தெரிந்துகொண்ட பின்பே சந்நியாசமளிப்பார். இக்காலத்தில யார் வேண்டுமாயினும் காலணாவிற்குச் சிவப்பு காவிக்கல் வாங்கி வெள்ளை வேஷ்டியைச் சிவப்பாக்கிக் கொண்டு சநநியாசியாய் விடுகிறார்கள். சந்நியாசியென்றும், யோகி, யோகீஸ்வரர், முனிவர், யதிகள் என்றும் இஷ்டமான பட்டத்தைத் தாமேகஷ்டமின்றிச் சூட்டிக்கொள்ளுகிறார்கள். பாமரர் மட்டுமேயன்றி, சாதாரணமாய்க் கல்வி கற்ற சிலருங்கூட உண்மை ஞானியா வென்பதை யறிந்து கொள்ளும் சக்தியின்றி ஏமாந்து மயங்கி விடுகிறார்கள்

உண்மை ஞானி அகபபடுவதே மிக்க அரிது என்றும் அவரைத் தரிசித்தால் சாக்ஷாத் பகவானையே தரிசித்ததை யொக்குமென்றும் நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே அத்தகைய ஞானிகளுக்கு உண்டி முதலியவற்றால் உபசாரம செய்வது மிகக சத்கருமம் என்று விளங்குகிறது. இக்காரணங்களால் உண்மை ஞானிக்கும்,

வேடஞானிக்குமுள்ள வித்தியாசத்தை நாம்கூடியவரையில் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமே யாகிறது.

ஆகையால் யாரை ஞானி என்று நினைப்பது; அதற்கு அடை யாளங்கள் என்ன வென்பனவற்றை யாராய்வோம்.

காஷாயங் கட்டிக்கொள்வதைக்கண்டு சாமியார் எனலாமா. அல்லது கௌபீனதாரியாயிருந்தால் துறவி யெனலாமா. அல்லது வாய் மட்டும் பேசாதிருத்தலைக்கண்டு மௌனசுவாமியெனலாமா. அல்லது நமக்கு ஆச்சரியமாகத் தோன்றும் ஏதாவது செய்கையைக்கண்டு, மகிமை யிருப்பதால் சுவாமி யென்றெண்ணலாமா. பகலில்மட்டும் சாப்பிடுவதனால் சுவாமியெனலாமா. வீட்டைவிட்டு மனைவி மக்க ளின்றித் தனியாயிருப்பதாலேயே ஞானியெனலாமா. ஜாதிபேத மின்றி யாவர்வீட்டிலும் புசிப்பதாலேயே துறவியென் றெண்ணிவிட லாமா. ஞானிதான் என்பதையெவ்வாறு அறிந்துகொள்வது? இதை யறியவேண்டுமாயின், மேற் கூறியவற்றால் மட்டுமே ஒருவனை ஞானி யென்று நம்பிவிடலாகாது. இதனாலெல்லாம் ஞானியை யறியமுடி யாது.

"வேடமாறிய பேர்களை யறியவே வேண்டினன் மகனேகேள்
கூடமாமவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல்
ஓடியுங் குதித்துந் தலைகீழ் நின்று முயர்ந்தகம் பத்தேறி
ஆடியும்பல கருமங்கள் செய்யினு மவருண்மை தெரியாதே."

என்று சாஸ்திரங்களில் கூறியிருப்பதுபோல், ஞானியை வெளி வேடங்களால் கண்டறிவது கூடாத காரியம். அவர்களுடைய மனோ நிலையைக்கணித்தே உண்மையை யறியவேண்டும். ஒருஞானி, துறவி அல்லது சந்நியாசியாகவே யிருக்கவேண்டுமென்ற விதியில்லை. இல் லறம் துறவறம் முதலிய எந்த ஆசிரமத்திலிருந்தும் ஞானத்தை யொருவன் பெறக்கூடும். ஞானம் வந்தபின்னும் ஒருஞானி இரா ஜாங்கம் செய்தாலும் செய்வான். வாணிபம் செய்தாலும் செய்வான், பிச்சையெடுத்தாலும் எடுப்பான். அவையாவும் அவனுடைய பிராரப் தத்தை யனுசரித்துநடக்கும் விஷயங்களாகும்.

"பந்தமனைதுறந்துசில ரதிதிகளா யிருந்தடைவர் பரமஞானம்
அந்தணர்மன் னவர் வணிகர் சூத்திரரா யிருந்துசில ரடைவர்ஞானம்
* * * * "

என்றும்,

"பேத கர்மத்தால்வந்த பிராரப்த நானாவாகும்
ஆதலால் விவகாரங்க ளவரவர்க் கானவாகும்

மாதவஞ்செயினுஞ் செய்வார் வாணிபஞ் செயினுஞ்செய்வார்
பூதலம்புரப்ப ரையம் புகுந்துண்பர் ஜீவன்முத்தர்."

என்றும் கூறியிருப்பதுகாண்க.

இவ்வாற்றால் ஞானி இல்லறத்திலும் இருக்கக்கூடும், துறவறத்திலுமிருக்கக்கூடும். ஆயினும் இல்லறத்திலிருக்கும் ஞானிவேடதாரியைப்போன்றவன். அவன்பார்வைக்கு உலகத்திலுள்ள மற்றப்பேரில் தானும் ஒருவனைப்போலவே நடிப்பான். ஆயினும் கந்தன் என்பவன் தசரதச்சக்ரவர்த்தி வேடந்தரித்து தேசவிசாரணை செய்யும் போது ஒருவன் பின்னால்சென்று, "கந்தா!" வென்றால் ஏன் என்று திரும்பிப்பார்ப்பான். அதுபோல் வெளிக்கு உலகவிவகாரத்திலும் அந்தரங்கத்தில் தன் நிஜசொரூபத்திலும் நாட்டம் வைத்திருக்கும் இல்லறஞானியை மிக்க சூக்குமமாய்த்தான் கண்டறியலாகும். பாம் பின்காலைப் பாம்பேயறியும் என்பதுபோல், ஞான அனுபவி அல்லது ஞான அப்பியாசியே யவர்களை யறியக்கூடும். அவர்கள் தங்களை ஞானியென்றே சற்றும் காட்டிக்கொள்ளமாட்டார்கள். ஆதலால் அவர்கள் உலகினரை ஏமாற்ற முயல்வதுமில்லை. உலகோர் அவர்களிடம் ஏமாறவேண்டிய சந்தர்ப்பமுமில்லை.

ஆகவே சந்நியாசிகள்என்றும் துறவிகளென்றும் வேடமணிந்திருப்போர்களிடமே பாமாஜனங்கள் ஏமாறிவிடுவது. ஆகையால் இல்லறத்தைநீத்து வெளிவந்த ஞானிகள் எவ்வாறிருப்பார்கள் என்பதையே நாமறியவேண்டும்.

ஒருமனிதன் மனைவிமக்களின்றித் தனியாயிருப்பதினாலேயே உலகப்பற்றொழிந்தவனாய்விடமாட்டான். ஒருவிஷயத்தில் அவனுக்குத் தொல்லை கொஞ்சம் குறைந்ததென்று எண்ணலாகுமேயன்றி வேறு விசேஷமொன்றுமில்லை.

ஞானியென்றால் தன்னை யறிந்திருக்கவேண்டும். தன்னை யறிதலென்பது மனமிறந்தாலன்றிக்கிட்டாது. மனமிறந்தவனுக்கு இச்சையில்லை. இச்சையற்றவனுக்கு உலகத்தைப்பற்றியாவது உலகரைப் பற்றியாவது ஒரு அக்கரையுமில்லை. மேலும் உண்மை ஞானி நாமரூபமாய்த்தோன்றும் எதையும் சத்தாய் மதிக்கான்.

ஞானி மனமிறந்தவன் என்றால், நடப்பது பேசுவது புசிப்பது முதலிய விவகாரங்கள் நடக்குமோவெனின் தடையின்றி நடக்கலாம். அவையாவும் அவன் வினைப்படியே நடக்கும். ஆனால் நமக்கு நடப்பதற்கும் அவனுக்கு நடப்பதற்கும் மிக்க தாரதம்மிய

முண்டு. அவனுக்கு மேற்கூறப்பட்ட விவகாரங்கள் நடந்தும் நடக்காதமாதிரியே. மனமிறந்து விவகாரம் எப்படி நடக்குமெனின்,

மனநாசம், சொரூபநாசம் அரூபநாசமென்று இருவகையென்று முன்னம் நமதுசஞ்சிகையில் கூறப்பட்டிருக்கிறது. ஞானியிடம்உருவமனமில்லை. சத்துவகுணமாகிய அருவமனமட்டுமேயுளது. அது ஆகாயம் போன்றதாதலால் அதில் எதுவும் பதியாது. இந்தவித்தியாசத்தால் அவனிடம் பலவித்தியாசங்கள் அமைந்திருக்கும். அவற்றில் சிலவற்றைக் கூறுகிறோம்:—

(1) ஞானத்தையடைந்து இல்லறத்தில் இருப்பவன் வேடதாரிபோல் என்று முன்னம் கூறினோம். அவன் வெளிக்கு உலக விஷயங்களையெல்லாம் தன்சொந்த வேலைகள்போல் செய்யினும் (உள்ளத்தில் அவன் ஆன்மசொரூபமாய்மட்டும் இருப்பவனாதலால்) மனதில் உலகவிவகாரங்களில் சற்றும் பற்றிராது. ஆகையால் அவனிடம் உலகவிவகாரங்களில் அசிரத்தையும் அசட்டைத்தனமும் காணலாம்.

இராமன் அன்னியன் ஒருவனுடைய கலியாணத்திற்குச்சென்று காலைமுதல் மாலை 6-மணிவரையில் மிக்க அக்கரையோடு கலியாண வேலைகளையெல்லாம்செய்கிறான். பார்க்கிறவர்களெல்லாம் இவன் கலியாணப்பிள்ளைக்கோ பெண்ணுக்கோ மிக நெருங்கிய உறவினன் என்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். மாலை 7-மணிக்கு மணமகன் திடீரென்று மார்படைத்து இறந்துபோகிறான். யாவருமழும்போது இராமனும் ஐயோ நான் ஆகாரங்கூட எடுத்துக்கொள்ளாமல் இவ்வளவு பாடுபட்டும் கடைசியில் இப்படியாய்விட்டதேயென்று துக்கப்படுகிறான். கடைசியில் இராமன் இரவு 8-மணிக்குத் தன்வீட்டிற்குச்சென்று தன்மனைவிமக்களோடு சந்தோஷமாய்ப் போசனம் செய்யும்போது, கலியாணவீட்டில் நடந்த சங்கதியைக் கதைபோல் கூறுவானேயன்றி மனதில் உறுத்தும் துயரம் அவனுக்குண்டாகாது.

இராமனுக்கும் கலியாணவீட்டு விஷயங்களுக்கும் இருந்த சம்பந்தம் எப்படியோ அப்படியே இல்லறஞானிக்கும் உலகவிவகாரத்திற்கும் உள்ளசம்பந்தம்.

இல்லறஞானியிடம் எப்படி உலகவிவகாரங்களில் அசட்டை காணலாகுமென்று கூறினோமோ, எப்படி இராஜாவேடமணிந்த கந்தனைக் கந்தாவென்றால் ஏனென்று தன் உண்மையை வெளியிட்டு

நான் வேடராஜாவேயன்றி மெய்யாக அரசனல்லவென்று வெளியிட்டு விடுவான் என்று கூறினோமோ, அப்படியே,

வேடஞானியும் என்னதான் சாமர்த்தியமாய் மெய்ஞ்ஞானியைப்போல் அபினயம்செய்தாலும் அவனுக்கு மனம் ஒடுங்கவில்லையென்பதையும், அவன் தன்னை யறிந்தவனல்லவென்பதையும், அவனுக்கு உலகப்பற்று ஒழியவில்லையென்பதையும் அவனுடைய நடக்கைகளால் கண்டறிந்துகொள்ளலாம். (தொடரும்)

---

## தருமம்.

(111-ம் பக்கத்தொடர்ச்சி.)

தென்னிந்தியாவில் சில நூற்றாண்டுகளுக்கு முன் சுப்பய்யா என்றொரு வேளாளனிருந்தான். அவனுக்கு மீனாட்சி என்றொரு மனைவி இருந்தாள். அவன் தரித்திர தசையிலுள்ளவனா யிருந்தும் எவ்வித கஷ்டமாவதுபட்டுத் தினந்தோறும் தான் சாப்பிடுமுன் ஒருவனுக்கன்னமிட்டு, பின்பு தானும் தன் மனையாளும் போஜனமருந்தி வருவது வழக்கம்.

அவனதில்லாள் தன்கணவனைவிடச் சிறந்த தருமகுணமுள்ளவளாயிருந்தாள். அவனது இஷ்டத்திற்கு எங்கே குறைவுவருமோவெனப் பயந்து அதிக எச்சரிக்கையுடன் நடந்து வருவாள். இத்தம்பதிகளிருவரும் இவ்வளவு மேன்மையான தருமகுணமுள்ளவர்களாயிருந்தும், இவர்களுக்குத் தரித்திரதசை மேலிட்டிருந்தபடியால் அதைப்பற்றிச் சிந்தியாது எங்கேயாவது இருவருங் கூலிவேலையாகிலுஞ் செய்து அதிதிக்கு அன்னமிடுவதை விரதமாய் அனுஷ்டித்து வந்தார்கள். இப்படியாக, இவர்கள் அதிக கஷ்டஜீவனஞ் செய்துகொண்டு தம்மாலியன்றமட்டும் தருமத்தை நடத்திக்கொண்டு வரும் நாட்களில், ஒருநாள் இவர்களுக்குத்தங்கள் சொந்த சம்ரக்ஷணைக்கே உணவுக்கு யாதொரு மார்க்கமுமில்லாது அதிக வருத்தப்படும்படியாக சம்பவித்தது. ஆகவே இன்றையதினம் நமக்கு இவ்வளவு கஷ்டத்தைக் கடவுள் கொடுத்தாரே யென்றிவர்கள் அதிக துயரத்துடன், தினந்தோறும் அதிதிக்கு அன்னமிட்டுக் கொண்டு வரும் விரதம் இன்று தவறுவதா யிருக்கின்றதே என்று, இருவரும் மனங்கலங்கி துக்காக்கிராந்தராய்த் தியங்கினார்கள். எந்த சத்புருஷனிடத்திலாவது தன் குறைகளைச் சொல்லிக்கொள்ளலாமென்று சுப்பய்யா வெளியிலிறங்கினான்.

அச்சமயத்து சர்வ வல்லபனான சங்கரன் இவர்களுடைய தரும குணத்தையும், உறுதியையும் உலகத்தாருக்கு தெரிவிக்கவெண்ணி, ஓர் விருத்தாப்பிய பண்டாரமாக வேடந்தரித்து இவர்களுடைய வீட்டுக்கு வந்தார். இவ்விதமெழுந்தருளிய தேவனானவர் வாசற்படியில் நின்றுகொண்டு, "யாரப்பா? புண்ணிய மூர்த்தியே! அதிகப்பசியா யிருக்கிறது. இரண்டு நாளாக போஜனமில்லாததினால் தேகம் மெலிந்து பிராணன் சீக்கிரம்போகுந் தருணத்திலிருக்கிறது. புசிப்பதற்காகக்கொஞ்சம் அன்னமிடுவாயப்பா! உனது தருமகுணத்தின் பிரதாபத்தை வெகு தூரத்திற் கேள்விப்பட்டு, உன்னிடம் வந்தால் இக் கொடும்பசியை ஆற்றிக்கொள்ளலா மென்று மிகுந்த ஆவலாய் வந்தேன்; அதிக இளைப்பினால் காதடைக்கிறது" என்று சொல்லி தள்ளாடிக்கொண்டே கீழே விழுந்தார். இதுகேட்ட மீனாட்சி திடுக்கிட்டு, ஓ! ஓ!! இவர் யாரோ ஒரு மஹாத்மாவைப்போல இருக்கிறார்; இவரை உபசரித்து இவரது களைப்பை மாற்றாவிட்டால் என்ன பாதகம் வந்து விடுகிறதோ; நம்முடைய காரிய நிர்வாகியும் வீட்டிலில்லையே, இத்தனை நாளாய் அவர் அனுஷ்டித்து வந்த நோன்பிற்கு இன்றையதினம் பங்கம் வரும்போலிருக்கிறதே. தெய்வமே! நான் என்ன செய்குவேன்? என்று ஆற்றொணாத் துயரங்கொண்டவளாய் அப்பெரியவர் முன்வந்து பயபக்தியுடன் வணங்கி வசனிக்கிறாள்: சுவாமிகளே! சற்றுட்காருங்கள். என்னுடைய பர்த்தா வெளியிற் போயிருக்கிறார்; சீக்கிரம் வந்து விடுவார். இதோ! ஒரு நொடியில் தேவரீருக்கு அமுது படைக்கிறேன் என்று அவரைத் தூக்கி ஒரு ஆசனத்தில் உட்கார வைத்தாள்.

இவ்விதம் உபசார வார்த்தைகள் பல சொல்லி அப்பரதேசியை ஆசனத்திலுட்காரவைத்துப் போன மீனாட்சி தெருவில் வந்து நின்றுகொண்டு வெளியிற்போன நமது கணவன் இன்னும் வரக்காணோமே, பண்டாரம் அதிக பசியினால் வருந்தி இளைப்புடனிருக்கிறாரே, கடவுளே! இஃதென்ன சோதனை! ஏழைகளை இப்படியும் பரீட்சிக்கலாமா? ஊர்க்குருவிமேல் இராமபாணமா? இது வரையில் ஒரு நாளும் எங்களுக்கு இப்படிப்பட்ட கஷ்டநிலை வந்ததில்லையே; வெளியிற் போயிருக்கும் என் பர்த்தா உணவுக்கு வேண்டிய பதார்த்தங்களுடன் உடனே வரமாட்டாரா? கர்த்தனே! என்று பற்பலவிதங்களாய்த்தன்னிஷ்ட தெய்வத்தைத் தியானஞ் செய்துகொண்டே யிருந்தாள். மீனாட்சி இவ்விதம் கடவுளை ஸ்தோத்திரஞ் செய்துவிட்டுத்

தன் தலைவனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்க, இதற்குள்ளாகப் பண்டாரத்துக்குச் சினம் பொங்கி, ஓ அம்மணீ! இஃதென்ன கபடமா யிருக்கிறது? இதுவரையில் நான் வேறெங்கேயாவது போய் என் பசியைத் தீர்த்திருப்பேன். அவ்வாறு போகவொட்டாமல் “வாழ்க்கைப்படுவதுங் கெட்டு அவிசாரி போவதுங் கெட்டது” என்னும் கதையைப்போற் செய்து விட்டாயே, ஆ! ஆ!! வெறும் வாயுபசாரஞ் செய்பவர்களில் உன்னைப்போல சாமர்த்தியக்காரியை இப்புவியில் நான் பார்த்ததில்லை. என்னை வேண்டுமென்று கொல்வதற்காக இங்கே பீடத்திலுட்கார வைத்துவிட்டு நீ உள்ளே நுழைந்துகொண்டு என்னுயிர் எவ்விதம் போகிறதென்று வேடிக்கை பார்க்கிறாயல்லவா? இது மிகவும் நன்றாய் இருக்கிறது! நீ இவ்வாறு எத்தனை உயிர்களை வாங்கின புண்ணியவதியோ தெரியாது; இவ்விதம் நடக்குமென்று தெரிந்திருந்தால் இந்தச் சண்டாளர் வீட்டுக்கு வந்திருக்கவே மாட்டேன். வகைதப்பிக் கண்ணியிலகப்பட்ட பறவைபோல் இந்ததுஷ்டர்களுடைய இடத்திற்கு வந்தகப்பட்டுக் கொண்டேனே, ஆண்டவனே! இஃதென்ன மாயம்? வேறெங்கேயாவது போய் வயிறு வளர்த்துக் கொள்வோமென்றால், பசியினால் எழுந்திருக்க முடியவில்லையே; இதோ! இந்த வாசற்படியிலேயே என் பிராணனை விட்டுவிடுகிறேன், என்று மெலிந்த குரலோடு சொல்லிக்கொண்டே மூர்ச்சையோடு தரையிற் சாய்ந்தார்.

இவ்வார்த்தைகளெல்லாம் கேட்டதும் மீனாட்சி நெருப்பில் விழுந்த புழுப்போலதுடித்து, ஆ! ஆ!! தெய்வமே! இப்படிக்கெல்லாம் நடக்கும்படி நீ வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாயல்லவா? கஷ்டத்துடன் நமது கொழுநன் இதுவரை நடத்திவந்த தருமத்துக்குப் பங்கம் வந்தபிறகு நமக்கு இப்புவியிலென்ன ஆசையிருக்கிறது? இந்த சமாசாரங்களை எனது பர்த்தா அறிந்தாரானால் உடனே பிராணத்தியாகஞ் செய்துகொள்ளாதிரார். அதற்குப் பிறகு நாம் உயிரை வைத்துக்கொண்டிருக்கலாமா? இக்கொடிய காட்சிகளை கண்ணுற்காணுமுன் நாம் சாக்ஷாத் பிறப்பிலியின் திருவடியைச் சேருதலே உத்தமமெனத் தீர்மானித்துச் சமையல்வீட்டிலிருக்கும் (அடுக்களையிலிருக்கும்) ஓர் கூர்மையான வெட்டரிவாளொன்றை எடுத்துத் தன் கழுத்தை யறுத்துக்கொண்டு உயிரைவிடுவதற்காக அதோமுகமாய்நின்றுகொண்டுகழுத்தின்மேபரில்அரிவாளைவைத்ததும்

உடனே, "ஓ! மீனாட்சி! சற்றுபொறு! அவசரப்படாதே" என்று ஆகாயவாணி உரைத்தது. இதுகேட்ட மீனாட்சி, இஃதென்ன விந்தை! இங்கே ஒருவரையுங்காணோமே! சத்தமுண்டாவதற்கு காரணமென்ன என்று, தலையைக் கீழேகுனிந்து பார்க்கவே, சமையலறைக்குள் பொற்றட்டில் திவ்வியமான அன்னமும், அறுசுவையோடுகூடின பதார்த்தங்களும், வெள்ளிக்குடங்களில் நெய், மோர், தயிர் முதலானவைகளும், பலவித பலகார பாயசவர்க்கங்களும் சூட்டுடன் அப்போதுதான் பாகஞ்செய்தாற்போல் நிறைந்திருந்தன.

இவ்வற்புதக் காட்சியைக்கண்ட மீனாட்சி அரிய ஆச்சரியப்பட்டு, இது தேவானுக்கிரகம்! என்று ஆனந்த பரவசமடைந்து, பரமேசுவரருடைய அருளைச் சிந்தித்து வியந்து பாடினாள். அக்ஷணமே அதிக களிப்புடன் அதிதியிடம் ஓடிப்போய், சுவாமி! அன்னமெடுத்துக்கொள்வதற்கு எழுந்தருளவேண்டுமென்று, களைப்புடனிருப்பவரிடம்போய்த் தக்க உபசார வார்த்தைகளைச்சொல்லி மெல்ல எழுப்பிக்கொண்டுவந்து தலைவாழைஇலை போட்டு, அதிலந்த சாதம், பதார்த்தம்முதலானவற்றைத் தாமதமின்றி அதிகசாக்கிரதையுடன் பரிமாறிக்கொண்டிருந்தாள். மீனாட்சியானவள் இவ்வாறன்புடன் இட்டபோஜனத்தைப் பிக்ஷைபாணியான பண்டாரம் மனமகிழ்ச்சியுடன் புசித்துக்கொண்டிருக்கும்போதே மாயமாய் மறைந்துபோயினர். இச்சமயம் வெளியிற்சென்றிருந்த சுப்பய்யாவும் இல்லம் வந்துசேர்ந்தான். மீனாட்சி, சாப்பிட்டுக்கொண்டிருந்த அதிதியானவர் மாயமாய் மறைந்துபோனதைக்கண்டு, ஒன்றுந்தோன்றாது திப்பிரமைகொண்டவளாய், நடந்தசங்கதிகளை ஆதியோடந்தமாய்த் தன் காதலனிடம் செப்பினவுடன், இவர் நமதுமனதை பரிசோதிக்க வந்த ஈசனேயல்லாது வேறொருவருமில்லை என்று மகிழ்ந்து, தம்பதிகளிருவரும் அவருடைய கிருபையைப் புகழ்ந்துபாடினார்கள். அவரது மகிமையைப் பலவாறாகக்கொண்டாடி ஆனந்தக்கூத்தாடினார்கள். நம்முடைய தவப்பயன் இன்றுதான் நிறைவேறியது என்றிருவரும் கைகொட்டிக் கடவுளை துதிசெய்துக்கொண்டிருக்கும்பொழுதே இவர்கள் குடியிருந்த பழையகுடிசையானது ஏழடுக்குள்ள உப்பரிக்கையாகமாறி, வீடுநிறைய நவரத்தினங்களும், தானியவகையாதிகளும், வஸ்திராபரணங்கள் முதலிய சகல சம்பத்துகளும் நிறைந்து விட்டன.

கருணாகரனுடைய அனுக்கிரகத்தால் இவ்வாறு உண்டானசம்பத்

தைக்களை எல்லாம் சுப்பய்யா கண்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கினவனாய்த் தன் மனைவியை நோக்கி சொல்லுகிறான். "ஓ! பெண்கள் நாயகமே! நமக்கிந்த பாக்கியங்களெல்லாம் சடுதியிலுண்டானதைப்பற்றியோசிக்குங்கால் நாம் அனுஷ்டித்து வந்த நோன்பின்பலனாக இவைகளைக் கடவுள் நமக்கு அனுக்கிரகஞ் செய்திருக்கிறார். இவைகளுக்கெல்லாம் காரணம் நீயே யொழிய என்னால் நடந்ததொன்றுமில்லை. தேவதேவன் உனது குணத்தைக் கண்டுமெச்சி உன்கையினால் அன்னமும்புசித்துச் சென்றாரென்றால், இதைவிட எனக்கு உயர்ந்த பேறு வேறென்ன இருக்கிறது? என் கண்மணியே!

" நற்குணமுடையவேந்தை நயந்துசேவித்தலொன்று
கற்புடைமகளிரோடு கலந்துவாழ்ந்திடுதலொன்று
பற்பலரோடுநன்னூற் பகர்ந்துவாசித்தலொன்று
சொற்பெறுமிவைகள்மூன்றும் இம்மையிற்சொர்க்கந்தானே."

என்றபடி, எனது தருமத்திற்கிடையூறுவராமல் காப்பாற்றிக் கொண்டு, இவ்வளவு பாக்கியங்களையும் உண்டாக்கின உன்னால் எனக்கு இம்மையிலே சுவர்க்கங் கிடைத்துவிட்டது, என்று பல வாறாகத்தன் மனதிற்கிசைந்தகாதலியின் தருமகுணத்துக்கும், ஒற்றுமைக்கும் புகழ்ந்து, சசிதரனது கிருபையினால் உண்டான சகல சம்பத்துக்களுடன் இருவரும் அநேகவிதத் தருமங்களை விருத்திசெய்துகொண்டு புத்திரபாக்கியத்தையும் பெற்றுப் பூரணாயுளுடன் வாழ்ந்து பிற்காலத்தில் மோட்சமென்ற வீட்டில்போய்ச் சேர்ந்தனர்.

ஆதலின் நாம் தருமத்தைக் கடைப்பிடித்து, எவ்வளவு இடையூறு நேரிட்டாலும் இடைவிடாது, நடத்தி நற்கதி யடைவோமாக.

---

## சசிவர்ணபோதம்

(116-ம் பக்கத்தொடர்ச்சி)

கிருபையே திருமேனியாகக் கொண்டவதரித்த மாநந்தி யாராயண முனிவரர் தன் சீடனைப் பார்த்துச்

சசிவர்ணா!

நவலுதற்கரிய நோயால் அவஸ்தைப்படும் நோயாளி யொருவன், கொடுமையாற்றாது மெய்வருந்தி அந்நோய் நீக்கிக்கொள்வான் ஓர் மருத்துவரைத் தேடிச்சென்று பாதம் பணிந்து *மெய்பாராட்டி

*மெய் பாராட்டல்=அசத்தியமுள்ள ஆடவர் மகளிர் முதலியோரேனும் தங்கள்பிணி நீங்கும்பொருட்டு இரகசியமாகவேனும் சங்கோசமின்றிச் சமயத்தே வைத்தியரிடம் உண்மையே கூறவேண்டுமென்பது விதியென்றறிக.

வேணவா விசைத்து, வைத்தியர் கூறும் வாக்கான் மகிழ்ந்து மருந்துண்டும் பத்திரத்தோடு பத்தியங் காத்தும் நாளுக்கு நாள் தனுவின் சங்கடந் தணித்துக்கொள்ளுவது போன்று, முற்கூறிய நான்கு சாதனங்களையடைந்து (விவேகத்தால்) பிறவி நோயால் நொந்துழல்கிறே மென்றறிந்த ஒருவன் அப்பிறவிப் பிணியை நீக்கிக்கொள்வான் (மருத்துவரென்னுங்) குருவை யடைந்து மெய்யன்பு பாராட்டி மோக்ஷாபேக்ஷையடைந்து உபதேசமென்னும் மருந்தைத் தன் செவியால் அருந்தி நாளுக்கு நாள் உறுதியென்னும் பத்தியம் காத்துப் பின் தன் பிறவித் †தனுவின் சங்கடந் தீர்த்துக்கொள்ளல்வேண்டும்.

ஹே அந்தண ! இவ்விஷயத்தைப்பற்றி விரிவாய் நானுனக்கு இயம்பவேண்டிய தவசியமில்லையன்றோ ? இதற்கு நீயே சாட்சி— ஆனால் இவற்றினும் சில இடையூறுகள் உண்டு.

அவையாவன!—இவ்விரண்டு சாதனங்களையடைந்து உலகியல் யாவுந் துறந்த தபோநிதிகளும் பூர்வவாசனை வலையிற்பட்டு சிறிது காலமோ அல்லது, சிறிது நேரமோ மோட்ச வழியிற்செல்ல இச்சையில்லாமற் போவதும் உண்டு. தக்க தக்க சமயங்களில் தாங்கள் கையாண்டுவந்த (க்ஷமை) பொறுமையைக் கைவிட்டோட்டிக் கடிந்து நின்று பின்னர் திடீரென்று (ஒருவர் பொறை யிருவர் நட்பு என்பதைக்) கவனித்துக் கருணையையும் கனிவையும் கையாடுவதும் உண்டு.

அப்பா ! கவனித்துக்கேள்,—மேற்கூறிய ஒருவர், தம் வித்தியா பலத்தினாலாவது, வாகோபதாரித், தனத்தாலாவது, பிரபுத்தன்மையாலாவது, மேன்மையினாலாவது, உயர் குலத்தினாலாவது, அனுசரவோர், ஆன்றோர், அறியார் ஆக இவர்களை இகழ்ச்சிகூறி இன்னலடைவதும் உண்டு. தாஞ்சொல்வது அக்கிரமமென்றறிந்தாலும் அச்சமயம் அவை சகஜமொழிகளென்றே பாவித்துப் பிதற்றிப் பின்னர் தன்னெஞ்சே தன்னைச்சுடும் என்பதுபோன்று சுற்றிச் சுழல்வதும் உண்டு. ஆக இத்தகைய இடையூறுகளே மிகப்பல. ஹே அந்தண !

ஆழ்ந்து கவனி, இத்தியாதி சாதனங்களால் ஒருவன் ஒரே காலத்தில் பக்குவப்பட்டுவிடமாட்டான். அநேக கோடி ஜன்மங்க

---

†தனுவின் சங்கடந் தீர்த்துக்கொள்வது=இனியேனும் பிறவாவகை தேடிக்கொள்வதாம்.

ளெடுத்து தொடர்ச்சியாய் மேன்மேலும் பழகி யறிந்தாலொழிய, அனுபவமாய்ப் பழகியறிந்த விஷயங்களிற் பற்றுதலடைந்து சாதன பக்குவமுண்டாகாது. சாதன பக்குவத்தின் பழக்கக் குறைவால் தான், இடையிடையே வந்து குதிக்கும் இடையூறுகட் கேதுவாக நேரிடுகிறது. அதனாற்றான் "நூதன விவேகி யுள்ளம் நுழையாது, நுழையுமாகில் பூத ஜென்மங்கள் கோடி புனிதனும் புருடனுமே" என்றார் மேலோர். ஆகையால் இப்பக்குவ சாதனங்கள் பகருதற் கரிய வெண்ணிலாச் ஜெனனப் பழக்கமாயிருக்கவேண்டுமென்றறியக் கடவாய். இச்சாதனங்களிற் பக்குவமடைந்த விவேகி மாத்திரமே குருமுகமாய் உபதேசம்பெற்று ரகசியங்கள் அறிந்து அகத்தே பதித்து, மானிடஜனனத்தின் உண்மைத்தன்மையை அறிந்து, தான் இன்னானென்று தெரிந்து தனக்குள்ளிருக்குமவனையுங்கண்டு, பரவசமாய் ஆனந்தமய மின்னதென்றறிந்து அனுபவித்து ஆகாமிய சஞ்சித பிராரப்தங்களை யெரித்து, இனி ஆக்கையடையாவண்ணம் அரும் பதவியையடைய அருகனுவான் என்றருளினர் அருந்தவ மிகுந்த மாநந்தி பாராயணமுனிவரர். இவை யாவையுங் கேட்ட சசிவர்ணன் சந்தோஷ சித்தனானன்.

இரண்டாவது சாதன சதுட்டய அத்தியாயம் முற்றிற்று.

---

## மூன்றாவது அத்தியாயம்

### பிறவிப் பெருங்கடல்

சந்தோஷ சித்தங்கொண்ட சசிவர்ணன், தவமுனிவர் சாற்றிய சாதனங்களின் தன்மை யுணர்ந்து, தனதகத்தே நிறைந்த சந்தேகங் களை யகற்றிப் பெரியாரைப் பேணிப் பேணிப் பெரிதும் பணிந்து, பேரானந்த மடைந்து,

ஹே ! அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயக அகோசராட் சர அசராந்தரட்ச அமரேசாம்ச ஆரணுகம அம்போருகாசன அரவிந்தாய தேவனை யனைய ஐய, ஹே ! உரகேந்திராதி உன்னத லோக பரிபாலன உதர தயாரச லோகார்த்த விலாச வுசித சங்க சக்ர கட்க கதாதர லோகோத்தம ப்ரகாச உவணு ரோகண உத்கிருஷ்டனை யொத்த உத்தம !

ஹே ! மணிநாகாபரண மதிமாகாமுத்தர் மழுமான் கரமேவிய மாதவ மகேந்த்ர மண்டலேச மகேசனைப் பொருவிய மகாநுபாவ ! ஹே ! குருபரனை யொத்த குணாதீத !

அடியேன், பகரற்கரிய பல பிணிகளாற் பரதவித்துப் பரதவித்துப் பருவரலெய்தி பாலிய முதல் வீண்பொழுது போக்கினேன். அங்காமிகளின் சேர்க்கையால் அறிவை யகற்றிக் கொண்டேன். செல்வச் செருக்கான மதமெய்தித் தீயனுனேன். மூவாசை யென்னும் முக்கடல்களில் மூழ்கினேன். அது என்னுடைய பூமி, இது என்னுடைய பொருள், என் மனையாள், என் பிள்ளைகள், நான் தலையெடுத்து சம்பாதித்தது, நான் செய்த தருமம், நான் கட்டிய வீடு, நான் கொடுத்தேன், நான் காப்பாற்றினேன், என்னும் பல கவுரவ வார்த்தையாடி அதனுல் நான், என்னும் மமகாரத்தை யடைந்தேன்.

ஐய! நாற்றங்கமழும் இவ்வுடலை நான் என்று நம்பினேன். நம்பி நன்ருய் நற்சுவைகள் நுகர்ந்து கொழுத்து அதனுல் என் அவயவங்களும் மனதும் என் வசப்படாமற் செய்துகொண்டேன்.

ஐயோ! இவைகளால் அடியேன்,

பொல்லாதவனெறி நில்லாதவன் புலன்கடமை
வெல்லாதவன்கலை கல்லாதவன் மெய்யடியவர்பால்
செல்லாதவனுண்மை சொல்லாதவன் திருவடிக்கன்
பில்லாதவன்மண்ணி லேன்பிறந்தேன் கச்சியேகம்பனே.

(பட்டினத்தடிகள்)

என்றபடி இறைவ! நான் ஏன் பிறந்தேன்? இவ்வுடலை ஏனடைந்தேன்? ஆன்மாவானது ஒரு தேகத்தோடு கூடி இவ்வுலகினிடமாக வந்ததில் சன்மார்க்க முதலியவைகளை யடையாமையால் இச்சனனத்தால் எனக்கோர் பிரயோஜனமும் இல்லை. ஆகையால் கழிந்தநாள் போக இனியேனும் நான் கடைத்தேறும் மார்க்கத்தை யெனக்கருளி யாட் கொள்ளவேண்டும், ஐயனே, இனி நான் என்றும்,

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய வென்னுயிர் நாதனே
உன்னை நாடுவ னுன்னருட் டூவெளி
தன்னை நாடுவன் தன்னந் தனியனே.

செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையும்
ஐய நின்னதென் றெண்ணு மறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யிலே சுழன்றே னென்ன புன்மையே.

ஐயமற்ற வதி வருணர்க் கெலாம்
கையிலா மலகக் கனி யாகிய
மெய்ய னேயிந்த மேதினி மீதுழல்
பொய்ய னேற்குப் புகலிட மெங்ஙனே. (தாயுமானவர்)

ஹே! உகரூரிய உத்தம தேசிக!

மனனமெனுந் திரைமோதி மதத்தெழுந்த பேராசை வாரிதன்

னிற், புனிதமுறும் புந்தியினலழுந்தாமற் கரையேறிப் போவதெந் நாள். இனி அடியேன் செய்யவேண்டுவதென்னே ? என்றேத்திப் பணியும் ஏழையை நோக்கிய இன்ப யோக வள்ளல் தம் மனமுவந்து இசைப்பதானார்.

சசிவர்ண ! சாதனங்களி னியல்பினுல் சகத்தின் தன்மை முற்றுமறிந்து சற்று விவேகமெய்திப் பின் தன் மடமையை நொந் தனை. ஆத்ம சுகமெப்போது கிடைக்குமென் றரற்றினை. தனதகத் துள்ள மனத்திரையோடும் இச்சைவாரியினூடு புத்தியென்னும் ஓடத்திலேறி அழுந்தாமல் சென்று கரையேறுவதென்று என்று கேட்டனையே யன்றி, அலைசூழ்ந்த வாரிதியில் புத்தி யென்னும் ஓடத்தில் எவ்வாறேறி அதனை எது கொண்டு நடத்தி யிடமுறுவண் ணம் அக்கரை சென்று கரையேறுவது என்று கேட்டிலை. சொல்வ தைக் கேள்.

அப்பா ! இச்சை யென்னும் படுகுழியில் அஞ்ஞான மென் னும் அபரிமிதமான ஜலம் நிறைந்து அதில் மனமென்னும் அநேக பிரிவுகளை யுடைய அலைகள் ஐம்புலன்களான ஐந்து திக்குகளினும் சதா வீசிக்கொண்டிருக்கும். அவ் வாரியினுள் ஓர் பக்கம் கூடஸ்த ஞகிய பிரகாசம் பொருந்திய மணி ஒன்று நிலவி நிற்கும். அவ் வாரியானது மண்ணிற்குத் தக்கபடி மாறுதலடைந்து தோற்றும் ஜலத்தைப்போல அகத்திற்குத் தக்கவாறு அந்நீர் பேதமடைந்து விளங்கும். அவ்வாரியி னுண்மணியும் அவ்வாறே அழுக்கடைந் திருக்கும்.

*அவ்விச்சைவாரியினூடு முதலாவது மோதும் அலைகளை யடக்கி நீரைப் பரிசுத்தஞ் செய்து அதன்மேல் புத்தியென்னும் ஓட மீதேறி நிலையென்னு மிடத்தே யமர்ந்து சன்மார்க்க மென்னுங் கோலிட்டுத் தள்ளிக்கொண்டேகினுல் அக்கரையோரம் நீரில் நிலவி நிற்கும் கூடஸ்தனுகிய மணியைக் காணலாம். (இக்கரை மோகக்கரை அக்கரை ஞானக்கரை) கண்டால் தான் ஆத்ம சுகானந்த முண் டாகும். விஷயமானது எளிதிற் புலப்படும் பொருட்டே உவரியாக

* இச்சைவாரி = என்பது. சித்தமானது அஞ்ஞானத்தால் மூடப்பட் டிருக்கிறது. அதனுல் இச்சைகொண்ட மனமானது ஐம்பொறிகள் வழி யாய் ஓடித்திரிகிறது. அவ்வைம்புலன்களை யடக்கி புத்தியால் மனதை ஒரு நிலைப்படுத்தி உண்ணேக்க அஞ்ஞானமகன்று விஞ்ஞானந் தோன்றும். அந்த ஞானவான்களால் அகக்கண் மூலமாய் கூடஸ்தனுகிய தனி வஸ்துவின் ஒளியைக் காணக்கூடும் என்பது இதன் லக்ஷியார்த்தம்.

உருவப்படுத்தியதாகும். இதனைத் தனதகத்துள்ளே வாரிபோன்றுன்னி உற்று நோக்குந் திறனுடைய தீவிர பக்குவமுள்ள செவ்வியோருக்குத் தெள்ளிதில் அவ்வாறே புலப்படும்.

அவ்விச்சை வாரிதியில் அலைந்தலைந்து மோதிக்கொண்டிருக்கும் அலைகளை அடக்க வேண்டுமென்பது என்னையெனில், சஞ்சல சக்தியினுற் சதா புலன்கள் வழியாய் சலித்துக் கொண்டிருக்கும் மனதை தன் வசப்படுத்திச் சற்று ஓர் நிலையில்நிற்கச் செய்யப் பழகுவது. இதுதான் முதலாவது மார்க்கம். இம் மார்க்கத்தில் மனதை வசப்படுத்த எப்படிப் பழகுவது என்ற ஓர் ஆசங்கை யுண்டாகும்—

ஐய ! அதன் விஷயத்தைக் கேள். இது அபாரமான காரியமன்று. ஆழ்ந்து கவனி. மனமானது எங்கெங்கோ செல்கிறதென்று ஏமாறுதே. இது ஒரு போக்கான மார்க்கம். பால்ய மாரப்ய ஏதட்சண பரியந்தம் உனக்குப் பழக்கமான இடங்களுக்கு மாத்திரம் உன் மனம் சென்று வருமல்லாது இவ்வுலகில் நீ பாராத இடங்களுக்கும் பொருள்களினிடமும் சென்று வராதென்பது கட்டாயம். இதனுல் மனதுக்குச் சுயஞானம் இல்லையென்றே விளங்குகிறது.

அப்பா ! ஒன்றைப்பற்றி ஆராயும் சக்தி மனதிற்கிருந்தாலும் நிச்சயிக்கும் சக்தியாகிய ஆராய்ச்சியின் முடிவானது இதற்குமேல் நிற்கும் புத்திக்கே யுரித்தானது. என்றுலும் மனதிற்குச் சிருஷ்டிக்கும் ஓர்வித மானசீக சக்தியுண்டு. நீ சாதனமாயுள்ள ஏதேனுமோர் பொருளை நினைப்பாயானுல் மனம் அவ்வாறே ஓர் இமைப்போதில் சிருஷ்டித்துக் காட்டி மறைத்துவிடும்.

இன்னமுங் கேள். (தொடரும்)

---

## உலகம் பலவிதம்

என்ற பெரியோர் மொழியைச் சரியாய் உணர்ந்தால் உலகத்தினிடத்துக் குற்றங் காண்பது அரிது. உலகம் பலவிதமாதலால் அதனிடத்துத் தோன்றியிருக்கும், மதங்களும் அம்மத ரகசியங்களை மனதிற் பதிக்கும் அறிவும் வித்தியாசப்படுகிறது. இதற்குக் காரணம் யாதெனில் மனது மிதமற்ற

குறிப்பு:—மனமானது அவரவர்கள் ஏற்கனவே கண்ணுற் கண்ட மாறுதலடையாத அசாப்பொருள்களைக் கவனிக்கில் ஆங்கு மனஞ்சென்று தாக்கி அவ்வாறே காட்டும் சம்பவத்திற்குச் சமஷ்டி யென்று பெயர். குறைந்து போதல், விருத்தியாதல், அழிந்துபோதல், மாறுதலடைதல் முதலிய சரப்பொருள்களைக் கவனிக்கின் தாங்கண்டவாறே காட்டும் சம்பவத்திற்கு சிருஷ்டி யென்று பெயர். (இது சித்தானுபவம்)

சங்கற்பவிகாச மடைந்திருப்பதுதான். மனது பலவிதமான போக்கைப் பின்பற்றுகிற நிமித்தம் அபிப்பிராய வித்தியாசங்களும் நவீனக்கொள்கைகளும் ஏற்படுகின்றன. ஆயின் சுய லாபத்தை அல்லது சுய உத்தேசத்தைக் கருதாது புறப்படுவிக்கும் நன்மையான எவ்வித முயற்சிகளும் கொள்கைகளும் அபிப்பிராயங்களும் ஈற்றில் நன்மையாகவும் உண்மையாகவும் முடிவுபெறும் என்பதற்கு ஐயமில்லை.

சிலர் உலக விஷயமாக உழைப்பார்கள். அவர்களுடைய உத்தேசம் பிரத்தியக்ஷ உலகானுபவங்களாகிய ஜனக்ஷேம சுவாதந்திரியம், நியாயாநியாயம், தேசசுகாபிவிர்த்தி, கைத்தொழில், பாஷை முதலியவைகளைக் கருதியிருக்கும். சிலர் ஆத்மீக சம்பந்தமான மத விஷயமாக உழைப்பார்கள். இவர்களுடைய உத்தேசம், மார்க்கசஞ்சாரம், அதனதன் மதரகசியங்களை அவ்வவ்வாறு போதிப்பித்து உண்மைகளை ஆராய்ந்தெடுத்து விளம்புதல், கர்மானுஷ்டானம், நூல்கற்பித்தல் இவைகளைக் கருதியிருக்கும். மேற்சொன்ன இரண்டு விஷயங்களில் இது ஆவசியம். இது ஆவசியமன்றென்று சொல்வதற்கில்லை. இரண்டும் ஆவசியமே. ஏனென்றால் பிரத்தியக்ஷத்தில் நின்றுதான் அப்பிரத்தியக்ஷத்திற்குப் போகவேண்டியதிருக்கிறது. சகுண உபாசனையில் நின்றுதான் நிர்க்குணோபாசனைக்குச் செல்லவேவேண்டியதிருக்கிறது இருட்டில் நின்றுதான் வெளிச்சத்தை யறியக்கூடும். அஞ்ஞானத்திலிருந்துதான் ஞானத்தையடையலாம். ஆகையினால் உலக விஷயமாக உழைப்பவர்கள் வீண் உழைப்பாளிகளென்றும், ஆத்மீக சம்பந்தமான உழைப்பாளிகளே உண்மை உழைப்பாளிகளென்றும் சொல்லுவது பிசகு. கிரகஸ்தனில்லாமல் ஞானியில்லை. ஞானியில்லாமல் கிரகஸ்தனுமில்லை. அதுபோலவே ஜடஞ்சித்து, விதிமதி, இவைகளை ஒன்று சேர்த்துப் பாராது பிரித்துப் பார்ப்பது பெரும் தவறாக முடியும், உண்மையும் அவ்விதமே. தவிரவும் உலகத்தில் எவ்விஷயமும் ஈஸ்வரசங்கல்பமில்லாமல் உண்டாகிறதில்லை. சங்கல்பமே உலகத்திற்குக் காரணம். வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை, கீழுமில்லை. ஓரணுவும் அசையாது.

"ஆன்றவறிவுடையோர் பா லறிவு நா னடங்கினர்பால்
வான்றதவநான் வளர்நன்மை பூண்டார்பால் வண்புகழ்நான்
தோன்றுமிகு திறலோர்பாற் காமமுறாத் தொல்வலிநா
னூன்ற பொருளனைத்தினுக்கு முயிராகியுள்ளேனென்."

மாட்சிமை தங்கிய புத்தியுடையோரிடத்து அறிவாக விளங்குவதுநான். மனம் அடங்கிய வானப்பிரஸ்தர் முதலிய தவத்தினரிடத்துள்ள பசிதாகங்களை அடக்கும் சாமர்த்திய ரூபமாகிய மேலானதவம் நானாகின்றேன். விளங்காநிற்கும் மிக்க வலியோரிடத்து ராகங்களை யடையாத சாமர்த்திய ரூபம் நானாகின்றேன். தாவரசங்கமரூபமான சர்வபிராணிகளிடத்தும் உயிராகியிருப்பதும் நானே. ,

என்று பகவான் கீதையில் கூறுகிறார். இதனால் சுவார்த்தமாகவல்லாது (தன்னயத்தைக் கருதாது) பொது நன்மைக்காக உழைக்கும் புண்ணிய புருஷர்களிடத்து கடவுளே அறிவாக விளங்குகிறாரென்றேற்படவில்லையா ?

ஆகையால் பொது நன்மைக்குழைக்கும் புண்ணியர்களை ஆக்ஷேபியாது தடங்கல் செய்யாது இயன்ற உதவிசெய்து அவர்களால் ஏற்படுத்தி நடந்து வரும் பத்திரிகைகளைத் தடைபெறாவண்ணம் உதவிசெய்து இலகுப்படுத்துவோமாக. பத்திரிகை வாசிப்பதினால் உண்டாகும் பயனைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் விரிவாகக் கூறப்படும்.

## வரம்புகடந்தவர்களின் கதி.

ஓர் ஊரில் குப்பன் என்னும் குயவனொருவனும் நடேசபத்த
னென்னுமொரு தட்டானு மிருந்தார்கள். அவர்களில் தட்டான்
ஒருநாள் குயவனை யழைத்து, "அண்ணே! நான் யாத்திரையாகக்
கொஞ்சநாள் வெளியே போய்வருகிறேன்; வரக் குறைந்தது ஆறு
மாதஞ் செல்லும். அதுவரையில் என் வீட்டையும் குழந்தைகளை
யும் நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டில் செலவுக்குப்
போதுமானபடி சகல சாமான்களும் வாங்கிப் போட்டிருக்கிறேன்;
அதுதவிர மற்றப்படி வேண்டியவற்றிற்கு நீ பார்த்துக் கொண்டால்
போதும்" என்றான். குயவன், "சரி போய்வா மகராஜனாக"
என்று சொல்லத் தட்டான் சந்தோஷித்து மறுநாள் அந்தக் கிரா
மத்தை விட்டுப் புறப்பட்டு ஒருவாரம் வரையில் நடந்து செவிந்திபுர
மென்னும் ஒரு பெரிய கிராமத்தை யடைந்தான்.

அங்கே சென்ற இவனுக்குச் சரியான போஜனங் கிடைக்க
வில்லை. ஆகவே தட்டான், "நமக்கோ பூணூலிருக்கிறது; மீசை
தான் அதிகம். அதைச் சிரைத்துக் கொண்டு வைதிகப் பிராமண
ரோடு சேர்ந்துவிட்டால் நமக்குக் காசும் சோறும் தடையில்லாமற்
கிடைக்கும்" என்று நிச்சயித்து அவ்வாறே மீசையைச் சிரைத்துக்
கொண்டு பிராமணர்களை யனுசரிக்கலானான். போன விடமெல்லாம்
போஜனம் வசதியாகக் கிடைத்தது. ஆகையால் தட்டான் அவ்வூரை
விட்டு வேறு எங்கும் போகாமல் ஆறுமாதமிருந்து வந்தான். தட்
டான் அந்த ஆறு மாதத்திற்குள் சித்தானைக்குட்டி கணக்காய்ப்
பருத்து விட்டான். சந்தோஷ மிகுதியால் தன் வீடுவாசல் பெண்டு
பிள்ளைகளையும் மறந்து திரிந்தான்.

இவன் ஊரைவிட்டுப்போய், வெகுநாளாய் வந்து சேராமை
யால் குப்பன் என்னும் குயவன் இவனைத் தேடிக்கொண்டு புறப்
பட்டு செவிந்திபுரம் வந்து சேர்ந்தான். இங்கே, தட்டான் ஒரு
பெரிய குளத்தில் பிராமணர்களோடு பிராமணனாயிருந்து அரு
ணோதய வேளையில் ஸ்நானஞ் செய்யக்கண்டான். அவனைக் கண்ட
தும் குயவன், "என்ன இது பூனை யானையாயினது போலப் பருத்து
விட்டான். பாப்பான்களுடன் இந்த விடி நேரத்தில் தலை முழுகு
கிறான்" என்றாச்சரியமடைந்து நாசிமேல் கைவைத்துத் தான் எந்த
இடத்திலிருந்து பார்த்தானோ அங்கேயே பிரமித்து நின்றான். அப்
படி நிற்கும் குயவனைத் தட்டான் கண்டுவிட்டான். உடனே தட்

டான், தன்னை எங்கே இவ்வளவு பேருக்கு நடுவில் பத்தரே யென்று அழைத்து விடுகிறானோ வென்றஞ்சி அவனருகே சென்று குயவனை வாய்பேசாமல் அவ்விடமே யிருக்கும்படி வேண்டிக்கொண்டு மீண்டும் முன்னிருந்த இடத்திற்கு வந்து ஸ்நாநஞ்செய்து திருநீரணிந்து கொண்டான். பிறகு குயவனிடம்போய் அவனோடு ஏதோ விஷயம் பேசுவதுபோலப் பேசிக்கொண்டே ஒரு தனிமையான இடத்திற்குச் சென்றான். அங்கே தன் ஸ்திதியை விசாரித்த குயவனுக்குத் தான் பிராமணரோடு கலந்துகொண்டு திருப்திகரமாய் நாடோறுமுண்டு காலங்கழிப்பதைத் தெரிவித்தான். அதுகேட்ட குயவன், "நானுமேன் பிராமணனாகக்கூடாது. எனக்கும் பூநூல் யிருக்கிறது. மீசையைச்சிரைத்துக் கொண்டு விடுவேனாயின், நான் பார்ப்பானாவதில் என்னதடை" யென்று சொல்ல, தட்டான், "சரி செய்; ஆனால், நான் சொல்லுகிறபடி செய்யத் தவறாதே" யென்று கூறிப் பின்பொரு அம்பட்டனைத்தேடி குயவன் மீசையைச் சிரைக்கச் செய்து அவனைக்குளத்தில் ஸ்நானம் செய்வித்துப் போஜனவேளைக்கு ஓரிடத்திற்கு அழைத்துச் சென்றான்.

அங்கே பிராமணர்களின் கூட்டமிகுந்திருந்தமைபற்றி இருவரும் ஒருவரை யொருவர் அடுத்துட்கார இடமில்லாமல் வெவ்வேறு இடத்தில் போஜனத்திற் குட்கார்ந்தார்கள்.

பின்பு கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இலைபோட்டு அன்னம் பரிமாறி வழக்கம்போல் போஜனம் போடப்பட்டது. அப்போது பிராமணர்கள் கையில் ஜலத்தை ஏற்றுக்கொண்டு கண்களை மூடியவாறே "கிஷ்ணா ராமா கோவிந்தா, ராமாகிருஷ்ணா கோவிந்தா" என்று சொல்லிக்கொண்டே ஆபோஜனம் வாங்கிக்கொண்டனர். அப்போது கண்ணை மூடிய குயவன், தான் தட்டான் மூலமாக பிராமணருடன் புசித்தற்குரிய எல்லாவிதிகளையும் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தானாயினும் மறந்து கண்ணை மூடியவாறே யிருந்துவிட்டான். அதுகண்ட மற்றவர்கள் குயவனை யாரோ மகான்போலிருக்கிறது என்று எண்ணி எப்போதும்போல் புசிக்கத் தொடங்கினர். அப்பொழுது குழம்பு பரிமாறிவந்த பரிசாரகன் குயவன்கையிலேந்தின நீரோடு கண்ணை மூடிக்கொண்டிருப்பதைப் பார்த்து, "ஓய்! என்னங்காணும் குசவனா யிருக்கிறீர்; சாப்பிடுங்காணும்" என்றான். குயவன் உடனே கைநீரைக் கீழேநழுவவிட்டு, "ஓய் பத்தரே! இந்தப் பாப்பானுக்கெப்படி என்பேர் தெரிந்தது," என்றான். பத்தன்

ஆடுதிருடின குறவன்போல் விழித்தான். பிராமணர்களிற் சிலர் உடனே எழுந்து பத்தனையும் குயவனையும் கைப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு குத்துயிராகும்படி நையப்புடைத்து ஊர் சிரிக்கச்செய்து துரத்திவிட்டார்கள். குயவனும் தட்டானும் பிராமணர்களுக்குப் பயந்து ஓடிவரும்வழியில் "பார்த்தாயா? நாம் பார்ப்பானானதின் பலன்? நம்ம அந்தஸ்தத்திற்கு மீறி யொன்றும் செய்யக்கூடாது. எப்போதும் அது தவறு. அவரவர்க்குரிய ஒழுக்கப்படி நடப்பதே மேன்மைதரும்" எனப் பேசிக்கொண்டு சென்றனர்.

## திருத்திக்கோள்ளவேண்டிய குறைகள்.

1. நாம் எதனைச் சரியென்றும் தவறென்றும் தீர்மானிக்கின்றோமோ அவ்வாறே பிறருக்கும் நியாயந் தீர்த்தல்.

2. நம்முடைய மகிழ்ச்சியோடு பிறருடைய மகிழ்ச்சியை ஒப்பிட்டுப் பார்ப்பது.

3. எல்லோருடைய அபிப்பிராயமும் ஒரேவிதமாக இருக்குமென்றெண்ணுவது.

4. சிறு வயதிலேயே உலக அனுபவம் வேண்டுமென்று ஆசைப்படுவது.

5. எல்லோருடைய குணத்தையும் ஒருமைப்படுத்த முயல்வது.

6. முடிவு பெறுதற்குச் சிறிதும் உபாயமில்லாத காரியத்தைப் பற்றித் தொந்தரைப்படுதல்.

7. நம்மால் செய்யமுடியாத காரியங்களை யெல்லாம் ஒருவராலும் ஒருபோதும் செய்யமுடியாதென்று நினைப்பது.

8. நம்முடைய மனத்திற்கு எட்டுவதைத் தவிர வேறொன்றையும் நம்பாதிருத்தல்.

இக் குணங்களெல்லாம் நீக்கப்படல் வேண்டும்.

---

## இதோபதேசம்

1. மனமே! நீ பாபஞ் செய்யாதிரு; "பாபஞ் செய்யாதிரு மனமே, நாளைக்கோபஞ் செய்தே எமன் கொண்டோடிப்போவான்" என்னும் பெரியார் உபதேசத்தை மறவாதே. எல்லாம் வல்லவனும் எங்கும் நிறைந்தவனும் ஏகனும் நித்தியனுமாகிய பகவானிடத்தே இடைவிடாத அன்பு செலுத்து. அந்த அன்பே உன்னை நன்னடக்கையில் நிறுத்தும். மமதை கொள்ளாதே; வஞ்சகம் நினையாதே; உன்னைப்போலவே எல்லோரையும் எண்; தன்னலங்கருதாதே; உள்ளுக்குள் ஒரு விதமும் வெளிக்கு ஒரு விதமுமாக இராதே; அதனை உன்முகமே உலகுக்குணர்த்திவிடும்; அகத்தழகு முகத்திலே தெரியும் என்பது பழமொழியன்றோ?

2. பகவான் உனக்கு நன்மை தீமை யுணரும் பகுத்தறிவு கொடுத்திருக்கின்றார். ஆகையால் நீ அவ்வறிவை உபயோகித்து நன்மை தீமை யறிந்து நட. சோம்பேறியா யிராதே. "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" என்பது பெரியார்போதனையன்றோ ? ஊக்கத்துடனிரு, அது ஆக்கம்பெருக்கும். பொய்யைத்தள்ளு ; மெய்யைத்தழுவு ; உய்யக்கருது ; உழைக்கப்பழகு. "மனம் ஒரு குரங்கு" என்று உன்னைத் திட்டும்படி நினைத்தகாறலையாதே. கண்ணியம் பெற முயல். எண்ணியவாறு முடிக்க இறைவன் திருவடியைத் தியானி.

3. இத்தகைய இதோபதேசத்தை நாம் நாடோறும் மனத்திற்குப் போதித்து வரவேண்டும். இவை யனைத்தும் மனத்திற்கு, விழித்துக்கொண்டிருக்கும் விழிகளின் முன்னே காணப்படும் சித்திரம்போல நம்முடைய உளக்கண்ணுக் கெதிரிலே நின்று அதனை நல்வழிப்படுத்துமாறு செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் நல்லார் பகையும் நாட்டார் பழிப்பும் உண்டாகும். இவற்றை யுணர்ந்து நடப்பவனே அறிஞனவன்.

4. கடவுள்—இந்தப் பதத்திற்கு எல்லாம் கடந்தது என்பது பொருள். இது தனக்கென்று ஒரு சொரூபமில்லாதது. ஸத்தியஞான ஆநந்தமே அதன் சொரூபம். அது எங்குமுள்ளது ; எல்லாம் வல்லது ; ஆதியந்தமற்றது ; எல்லா அண்டங்களுக்கும் ஆதாரமாயிருப்பது ; தனக்கொரு ஆதாரமுமில்லாதிருப்பது ; ஸர்வ அண்டங்களையும் அவற்றிலுள்ள அசையும் பொருள் அசையாப் பொருள் எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கும் தொழிலுடையது. ஜீவாத்மாக்களுடைய பாப புண்யங்கட் கேற்றவாறு பலனை யறிந்து அவைகட்கு ஊட்டுவிக்கும் மகிமை யுடையது. வாக்கு மனத்திற்கு எட்டாமலிருப்பது. அணுவுக்கு அணுவாயும் மகத்துக்கு மகத்தாயுமிருப்பது. அதற்கு ஒப்பானதும் மேலானதுமில்லை. இவ்வாறிருக்கும் இந்தப் பரம்பொருள் அன்பர்களுடைய சித்தத்திலே அவர்களுக்கநுக்கிரகிக்கும் பொருட்டுத் தோன்றக்கூடியது. அது தன்னுடைய இச்சாமாத்திரத்தில் அளவிறந்த திவ்ய சொரூபங்களை யெடுத்துக்கொண்டு தன் பக்தர்களுக்கு அனுக்ரகிக்கும் பேராற்றலுடையது.

5. இப்படியாக விளங்கும் தெய்வத்தைக் காண்பதற்குப் பொய்யற்ற நெஞ்சும் மெய்யன்புடைமையும், வஞ்சனையற்ற தன்மையும், ஜீவகாருண்யமும், அன்னை தந்தையரை வழிபடும் தூயகுணமும், குருசேவையும், தெய்வ பக்தர்களுடைய கூட்டுறவும், ஸத்சங்கசகவாசமும், துர்ச்சங்க ஒழிவும் வேண்டுவது இன்றியமையாததா மென்று பலகாலும் தவங்கிடந்து மெய்யுணர்வு பெற்ற பெரியோர் கூறியிருக்கின்றனர். இவற்றிற்கு மாறான குணங்கள் கூடாவென்று விளக்கியுள்ளார் ; எப்போதும் தெய்வ சிந்தனையுடனு மிருத்தல் வேண்டும் என்பதும் பெரியோர் போதனை.

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை என்றும் சிவன்றாளினை" என்று கூறுகின்றது ஒளவைக் குறள்.

6. தெய்வ வழிபாடு மூன்று வகையாகும். அவை குரு, லிங்க, சங்கமம் என மூன்று வகையாகும். தனக்குப் பற்றுதலுள்ள ஒன்றினிடம் சிந்தையைச் செலுத்தி ஆராதிப்பதே தெய்வத்தைக் காண்பதற்கு நல்லவழியென ஆன்றோர் விளக்கியுள்ளமையின், மேற்கண்ட மூன்றனுள் எந்த பக்தியையேனும் செய்யலாம். இக்காலத்தில் உண்மையான குருவைக் காண்பதரிதாய் விட்டது. ஆதலின் அப்படிப்பட்டவர்களிடத்தில் தெய்வ விசுவாசம் வைப்பது எப்படி யமையும்? அன்னையும் பிதாவும் குருவடிவிலடங்குவதால் அவர்களிடம் பக்தி செலுத்தலாம். அஃதும் இக்காலத்திற் சித்தி பெறாது. ஏனெனில் அவர்களிடம் தெய்வ விசுவாசம் வைப்பவரும் மிகச் சொற்பமானவர்களே யாவர். உண்மையான தெய்வபக்தி யுண்டாமாயின் குறிப்பிடப்பட்ட மூவகைப் பக்தியும் தாமேயமையும். அது "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்று ஔவைப் பிராட்டியாரின் போதனைப்படி, ஆலயம்போய்க் கடவுளைத்தொழுது லிங்க வழிபாடு செய்வதாலேயே சித்திப்பதாம்.

---

## வியாதி மூலங்கள்.

(139-ம் பக்கத் தொடர்ச்சி.)

தேகத்தை நெடுநேரம் குளிர் அல்லது குளிர்ந்து வீசுங்காற்றுக்கு வெளிப்படுத்துவதனால் (Exposure) வரும் முக்கிய வியாதிகள் :—சாதாரண ஜலதோஷம், தொண்டைக்குரிய பல வியாதிகள், புட்டாளம்மை (இது அம்மை அல்ல, வியாதி), சாதாரண இருமல், உஷ்ண இருமல், மாருளைப்பு, இரத்தகாசம், க்ஷயம், சுவாசகாசம் (Asthma), குலைநோய், தலைநோய், சுரம், வாந்தி, கண் நோய், காதுநோய், பேதி, ஈரல் வியாதிகள், மண்ணீரல் வியாதிகள், இடுப்பு புறங்கழுத்துகளின் பிடிப்பு, இப்படிச் சிறிதும் பெரிதுமான இன்னுமநேக வித வியாதிகள் சீதளாஸ்பதத்தா லுண்டாகின்றன. இவற்றுளொன்று காணும்போது, நமது ஜனங்கள் சாதாரணமாய்ச் சொல்லுங் காரணம் யாது? ஜலதோஷத்தால் மூக்கில் ஜலம் வடிந்து தொண்டை கட்டிக்கொள்ளும்போது, அதற்கு முன், பனியால் அல்லது குளிர்ந்த காற்றில் வெற்றுடம்போடு அல்லது (மெல்லிய) வஸ்திரம் போர்த்து நெடுநேரம் படுத்திருந்த அல்லது உலாவித் திரிந்த துர் வழக்கத்தைக் காரணமாகச் சொல்லுகின்றதில்லை. பனியில் விடியற் காலத்தில் வெற்றுடம்போடு அல்லது மெல்லிய வஸ்திரம் போர்த்து வெளியே சென்றும், பனிக்கட்டியைப்போற் குளிர்ந்திருக்கும் ஜலத்தில் ஸ்நாநம் பண்ணிக்கொண்டு வந்ததுமான துர்வழக்கங்களையும் காரணமாகச் சொல்லுகிறதில்லை. ஜலதோஷங் காணுவ

தற்கு முன்னால் சாதாரணமா யுண்ட சீதள பதார்த்தங்களென்று சாதாரணமாய் யெண்ணப்படும் சுரை, முள்ளங்கி, வெங்காயப் பச்சடி, தயிர், மாதுளம்பழம், கிச்சிலிப்பழம், கேழ்வரகுகூழ், பழஞ் சோறு ஆகிய இவை போன்ற பதார்த்தங்களுள் ஒன்றை யுண்டிருந் தால், அதனால்தான் ஜலதோஷம் பண்ணித் தொண்டை கட்டிக் கொண்டது என்று "பாவமொருவர் மேலிருக்கப் பழியொருவர்மேற் போடுங் கதை" போலும், நிரபராதியும், உபகாரியுமா யிருப்போர் ஓரோர்கால் குற்றவாளிகளாக தண்டிக்கப்படும் அனியாயம்போலும், சாதாரண ஜனங்கள் பெரும்பான்மையும் சொல்லுகிற வழக்கம். இவ்வஞ்ஞானத்தின் பயன் யென்னவெனில், ஜலதோஷத்துக்கு மேற் சொன்னதுபோல் காரணம் வேறே தேடிக்கொண்டபடியால், உண்மையில் காரணமாயிருந்த மேற்சொன்ன துர்வழக்கங்களிலேயே மேன்மேலும் பிரவர்த்தித்து வர நேரிடுகின்றது. நேரிடவே, ஆரம் பத்தில் வெறுஞ் ஜலதோஷமாத்திரமாயிருந்த வியாதி நாளுக்குநாள் முற்றி, மேலே காட்டியதுபோல், தலைநோய், சுரம், நுரையீரலின் (சுவாசாசயம்) வியாதிகளாகிய இருமல் (இதில் நியுமோனியா முத லிய மரண ஏதுவான வியாதிகளடங்கும்) க்ஷயம், சுவாசகாச முத லிய பலத்த வியாதிகளாகிப் பிராணசேதத்தை யுண்டு பண்ணுகின் றது. இதற்கு திருட்டாந்தமாகச் சீதளகாலம் வரும்போது நாம் கவனமாய்ப் பார்ப்போமானால், அநேகர் மேற்சொன்ன வியாதி களால் வருந்துவதைப் பிரத்தியக்ஷமாய்க் காணலாம். சீதள பதார்த் தங்களை யுண்பதனால் வியாதிகள் வராவென்று யாம் சொல்ல வர வில்லை. பனிக்கட்டி யிட்ட ஜலம், எலுமிச்சம்பழம், மாதுளை ரசம் ஆகிய இவைபோன்ற சீதள வஸ்துக்களை அளவறியாமலும், கால மறியாமலும் உண்டால் ஜலதோஷ முதலிய வியாதிகள் காணப்படும். ஆனால், இக்காரணங்கள் சாதாரணமல்ல. அளவறிந்துங் காலமறிந் தும் உண்டால் இவ்வஸ்துக்கள் தேகத்துக்கு ஆரோக்கியமே தரும். இருமல் முதலிய கபரோகங்களாகும் மார்பக வியாதிகள் (chest complaints) காணும்போது, அவை ஊஷ்ணத்தாற் கண்டன வென்று சொல்லிச் சீதள பதார்த்தங்களை யதிகமாய் யுட்கொண்டு வியாதியைப் பலப்படுத்திக் கொள்வாருமுண்டு. மார்பக வியாதி கள் எப்போதுஞ் சீதளாஸ்பதங் காரணமாகவே வரும். ஆதலால், சீதள காலங்களில் முக்கியமாய் வீட்டை விட்டு வெளியிற்போக நேரிடும்போது, மார்பை (மற்ற அங்கங்களையுங் கூடத்தான்) ஊஷ்ண

மான வஸ்திரப் போர்வையாற் போர்த்து, சர்மத்தை யிளஞ்சூடுகை யாய் வைத்துக்கொள்வது வியாதியைத் தடுப்பதற்கும், வந்த வியா தியை யதிகப்படாமல் குறைப்பதற்கும், தேகத்தை ஆரோக்கிய மாய் வைத்துச் சுகமடைவதற்கும் தக்க உபாயமா யிருக்கும். கம்ப ளித் துணிகளால் (பிளானெல்) அங்கி (கோட்) தைத்துப் போட்டுக் கொள்ளலாம். அல்லது கம்பளத்தாற் செய்யப்பட்டுள்ள துப்பட் டாக்களைப் போர்த்து வெளியே போகலாம். இவ் வுடுப்புகள் உஷ்ண காலத்துக்கு உதவா. குளிர் காலத்தில் மெல்லிய வெறும் பஞ்சு வஸ்திரம் அல்லது அங்கி போர்த்து வெளியே சென்று வரும் வழக்கம் வியாதியைத் தடுப்பதற்கான நல்ல வழக்கமல்ல.

(தொடரும்)

---

## "ஈகை"

நான்முகனாற் றெருக்கப்பட்ட பல்கோடி ஆன்மாக்களுள் இம் மனிதவர்க்கமே மேம்பாடுடையது என்பது நம்மூதாட்டியாகிய ஔவையார் என்பவரது திருவாயினின்றும் போந்ததோர் வாக் காகிய "அரிதரிது மானிடராதலரிது" என்னும் உண்மை மொழியாலுணரப்படும். ஆயினும் மானிடராதல், பிறவியினால்மாத் திரமேயன்று. "விலங்கொடுமக்களனையர்" என்னும் நாயனார் திரு வாக்கை நோக்குமிடத்து மனிதக்குழாத்துட்டோன்றப் பெற்றானாயி னும் கல்வியறிவில்லாக்கடைவிலங்குள் எண்ணப்படுகிறான். நம்மிடை விலங்குகளோடு வேற்றுமையை உண்டுபண்ணுவது இக்கல்வியே. கல்வி விலங்கின்றன்மையை நீக்குவதால் வேண்டப்படுவதாகும் எனி னும் கல்வி வேறு சில அழகிய குணங்களோடு சேர்ந்தே நம்மை அழகுபெறச் செய்கிறது. ஈகை, நற்குணம், மெய்ம்மை முதலிய வைகளால் சிறந்து (நிற்றலில்லானெனின்) நிற்கப்பெறான்எனின் கல்விகேள்விகளின் நிறைவால் யாதுபயன்? அவற்றுள் ஈகையைப் பற்றி ஆராய்ந்தறியத் தொடங்குவாம். "ஈகை" அஃதாவது வறிய வராய் இரந்தார்க்கு இல்லையெனாது தம்மாலியன்றவளவு கொடுத்தல் எனப்பொருள் படுத்திக்கூறலாம். "ஈகை" என்னும் சொல் "ஈ" எனும் பகுதியடியாகக் "கை" எனுந்தொழிற்பெயர் விகுதிபெற்று, மேற்கூறிய கொடுத்தல் எனும் பொருளைத் தந்துநிற்கும். வறியார் மாட்டுச்செய்யும் ஈகையே பயனுடைத்து. "வறியார்க்கொன் றீவதே ஈகை, மற்றெல்லாங் குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்

பது நாயனார் திருவாக்கல்லவா ? கடவுளின் அமைப்பின் பாற்பட்டு இயங்குகின்ற ஓரே கூட்டத்தினராகிய நாம் அவருடைய அவயவங்கள், அவர் தலைவர். இப்பெருங்கூட்டத்து ஈதல் என்னுஞ் சிறந்த குணம் தலையோங்கித் தழைக்காதிருப்பின் கடவுட் கருணைவிழி இக்கூட்டத்தினரை விட்டுப்பிரியுமன்றோ? "செல்விருந்தோம்பிவருவிருந்து பார்த்திருப்பான், நல்விருந்துவானத்தவர்க்கு" என நாயனாரும், "தானமுந்தவமுந் தான்செய்வராயின், வானவர்நாடு வழிதிறந்திடுமே," என ஔவையும் சொன்னக் கட்டுரைகளால் ஈகையுடையவனை மறுமைப்பயன்சாருமன்றி, ஈயாமைஎன்னும் இழிகுணத்தைப் பொருந்தியவன் வானுலகடையான் என்று நன்கு விளங்குதல் காண்க.

துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும். (நாலடியார்)

என்றபடி எல்லாராலும் பரிஹஸிக்கப்படுவனன்றி வானுலகடைதல் எப்படிக்கூடும் ? மேற்கூறிய நாலடியார் வெண்பாவின் கருத்துரை யாதெனின், "அருமையாகப்பெற்ற பொருளை தான் அனுபவியாமலும், பிறர்க்கும் யாதொன்றையும் ஈயாமலும், பாடுபட்டுத் தேடின பொருளால் தான் யாதொரு பயனும்பெறாது சாவானை அவன் தேடிக் குவியலாகக் குவிந்துவைத்தப் பொருளும் பரிஹஸிக்கும்; அருள் அவனைப் பரிஹஸித்தற்குக் காரணம் யாதெனின் "அருளிலார்க்கவ்வுலகமில்லை," "அறனுமருளுடையான் கண்ணதேயாகும்" என்றபடி, தானம் முதலியவை செய்தற்குக் காரணமாகிய அருளைச் சிறிது முடையனாகாமற் பொருளைப் பாழ்படுத்தினதுபற்றி அவ்வருள் அவனைச்சிரிப்பதாயிற்று. இதுநிற்க, மறுமைப்பயனடைதற்கு இம்மையிற்செய்யும் நல்வினை தீவினைகள் காரணமாகா. மறுமை என்பது சுத்தபொய் என்னும் நாஸ்திகர்களது கொள்கையை யுடையார்க்கும் ஈகையானது உபயோகப்படுகிறதா ? அதாவது ஈகையானது இம்மைப்பயனை யேதாவது தருகிறதா ? எனின், ஈகை இவ்வுலகில் நிலைபெற்று நிற்கும்படியானதும் அழிவில்லாததுமான புகழ் என்னும் சிறந்த பயனைத்தருகின்றது எனக்கூறலாம். இப்புகழ் என்னும் சிறந்த உடம்பைக்கொண்டு இவ்வுலகத்துலாவிவரும் ஸ்ரீகம்பநாட்டாழ்வார், மஹாகவி ஸ்ரீகாளிதாஸன் முதலியவர்களது அருமைபெருமையை அளவிடக்கூடுமா?

அமிழ்திற்சிறந்த தமிழ்மொழியதனை சொற்சுவை பொருட்சுவையோடு இனியநடையில் ஸ்ரீராமசரிதத்தைப் பிரபந்தமாகப் பாடி ஈந்ததினலன்றோ நாமும் நமக்குப் பின் உலக முள்ளளவளவும் அவரைப் புகழ்ந்து கூறுகின்றோம். அப்படியே வடமொழிக்காவியங்களியற்றுவதில் தேர்ச்சிபெற்ற காளிதாஸ மஹாகவியும் இவ்வுலகில் பண்டிதர்கள் காதுகளால் பருகத்தக்க தேன்போலும் மிக்க சுவை முதிர்ந்த இனிய காவியங்களை ஈந்து அதின்பயனுக உலகுள்ளவரை அழியாத புகழுடம்புகொண்டு ஜீவித்துவருகின்றனர். அந்தோ! அத்தகைய பெரியோர்களது பெருமையை எத்துணைச் சிறப்பித்துச் சொல்லி வியப்பது! கம்பராமாயணச்செய்யுளையாவது குமாரஸம்பவம் முதலிய காவ்யரத்தினங்களையாவது எடுத்து வாசிக்கப்புகின், கற்பனை மிகுந்த அம்மஹாகவிகளது வாக்கியங்கள் நம்மனதிற்புகவும், கையிலுள்ள புத்தகங்களை அப்பெரியார்களது உருவமாக நினைக்கின்றோம். உள்ளபடியே கருணைரஸம் நிறைந்துள்ள செய்யுட்களை நோக்குமிடத்து நம்முடைய கண்கள் நீர்த்துளிகளைப் பளபளவென்று கொட்டுகின்றன. மனது உருகுகிறது. அச்சமயம் உடம்பில் ஒருவித ஆற்றலும் புதுஉணர்ச்சியும் உண்டாகின்றன. வேறு வேறு சொல்வதிற்பயனென்? உண்மையாகவே அவர்கள் நம்மெதிரில் நின்று வார்த்தை யாடுவதுபோலவே யிருக்கிறது. நம்மனதினிடை இத்தகைய பரமானந்தவெள்ளத்தை அம்மஹாகவிகளது திருவாக்குகள் உண்டுபண்ணுகின்றன. அந்தோ! அம்மஹான்களுடைய திருவாக்குகளுடைய வன்மை இத்தகைய பிரபந்தங்களை நமக்குத் தந்து நம்மனதிற்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுவதற்கு அவரது ஈகையே காரணமாயிற்று. இத்தகைய ஈகைக்குக் கைம்மாறு நாம் எதைக்கொடுக்கவல்லேம்? வாயாறப்புகழ்வதன்றி நாம் அல்லது நமக்குப்பின் இவ்வுலகம் வேறு எதைக் கைம்மாருகக் கருதமுடியும்? "தோன்றிற்புகழொடு தோன்றுக வஃதிலார்—தோன்றலிற்றோன்றாமை நன்று" என்பது திருவள்ளுவர் வாய்மொழியன்றோ. புகழின்றி மனிதப்பிறப்பிருக்குமேல் அதுமிக்க இழிந்தது என்பதில் என்ன ஐயம்? அப்பேர்ப்பட்டபுகழும் ஈகையினுலேயே உண்டாகின்றது.

'ஈகை' இம்மையில் புகழையும், மறுமையில் மோக்ஷத்தையும் அளிக்கின்றது. ஆதலால் இப்பெரும் பயன்களைத் தரும் வல்லமையுடைய ஈகையைத் தவருது கையாண்டு வருவதற்கு சற்றும்

பின் வாங்காது நிற்குமாறு சர்வவல்லமையுள்ள கடவுளை வணங்குவோமாக.

இதனிடை நம்மூதாட்டியின் உரையை இங்கு ஞாபகத்திற்குக் கொண்டுவருவோமாக.

" அரியது கேட்கின் வரிவடிவேலோய்
அரிதரிது மானிட ராதலரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடுநீங்கிப் பிறத்தலரிது
பேடுநீங்கிப் பிறந்தகாலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது
ஞானமுங் கல்வியு நயந்தகாலையும்
தானமுந் தவமுந் தாஞ்செயலரிது
தானமுந் தவமும் தாம் செய்வாராயின்
வானவர்நாடு வழிதிறந்திடுமே "

---

## உலகோர்க்கொரு வேண்டுகோள்.

நண்பர்காள்! இந்நானிலத்தில் நாம் அடைதற்கரிய வோர் செல்வத்தை யடைகின்றோம். அடைவதுமட்டும் பெரியதல்ல: அதனைச்செய்கையால் பரிசோதித்தறிவதே உசிதம். முற்காலத்தில் இவ்வரிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள சற்குருவைத் தேடி யலையவேண்டும் என்றனர் பெரியோர்.

தற்காலமோ அச்சிரமத்தைக் குறைக்க வெண்ணிய ஆனந்தபோதினியாள் அனந்தங் கல்வியாளரிடம் சுருதியுக்தி அனுபவத்தால் அறிந்துள்ள அரியவிஷயங்களைத் திரட்டிக் கொண்டுவந்து நாம் ஒரு சிரமமு மடையாது ஊட்டுகின்றனள்.

இதனைக் கைப்பற்ற காத்திருங்கள். "கரும்புதின்னக் கூலியா" என் அருமை நண்பர்களே! புரட்டாசிமாதம் ஜெனித்த ஆனந்தபோதினி மூன்றாவது குழந்தை புகலும் இனியமொழி என்னையும், எனது நண்பர்களையும் பன்முறை வாசிக்கச் செய்வதுடன் கூட அதனைப் பின்பற்ற வற்புறுத்துகின்றது. இவ்வரிய விஷயங்களை வெளியிட்ட மகான்களுக்கும், இதனை வெளியிட முயற்சி யெடுத்துக் கொண்ட பத்திராதிபருக்கும், என்றும் மறவாத நன்றியறிதலைக் காட்ட உரிமையுள்ளவர்களாக இருக்கின்றோம்.

நம் இந்து தேசாபிமானிகள் அறிய வேண்டிய முக்கிய விஷயம் ஒன்றுண்டு. வெகுகாலம் பூட்டகமாய்ப் பல பாடல்களாய் இருந்த அனேக விஷயங்களை நம்மவர்களில் அதிகக் கற்றவர்களே அறிந்துள்

ளார் என்பது உண்மை ஆயின் வெளியிட்டிருப்பது அருமை. தற்காலம் இவ்வானந்த போதினியோ, அவ்வித பூட்டகமான விஷயங்களை எளிய நடையில் வசனரூபமாய் யாவரும் கண்டு களித்து உணரும்படி, கல்விக் களஞ்சியங்களிலிருந்து வாரிக்கொண்டு வருகிறது. இது தான் நல்ல தருணம். சந்தாதுகையை ஒரு பொருட்டாக எண்ணாமல், அது தபாற்கூலி எனவும், விஷயம் நாம் அடையும் செல்வமென்றுங் கருதுங்கள்.

ஆயினும் வாசிப்பதால் மட்டும் ஒரு பயனுமிராது. நங்குரவர் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய,

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
நற்றா டொழாஅ ரெனின்"
"கற்கக் கசடறக் கற்றவை சற்றபின்
நிற்க வதற்குத் தக"
"உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று"

என்பவற்றிற்கிணங்க எல்லாம் வல்ல இறைவனருளினாலும், நம்முயற்சியாலும் அனுபவத்தில் கொண்டுவந்து நம்நாடு நன்னாடு என வானீர் மொழிய வழிதேடுவோமென்பதே, எமது வேண்டுகோள்.

---

## தூய்மை.

வெப்பத்தால் வருந்துமொருவனது, அப்புவை விரும்புவது இயல்பாமாறுபோல், மலினமாகிய மானிடயாக்கை மாசு நீங்கித் தேசு மிகப்பெற அவாவுறும். மலமுள இவ்வுடம்பு விமலனை யடையும் பொருட்டே உதவப்பட்டது. மழுவேந்திய ஐயன் திருமுன்னர் அழுக்குடன் போகலாகாது. தூயவனான வாய்மையினன் உள்ளத்தை வெள்ளைத்தனமாக்கிய கள்ளத்தனமில்லாப் புனிதரகத்தில் மேவி வீற்றிருப்பன். உத்தமன் நமது சித்தமிசை குடிகொண்டருளும் பொருட்டு நாம் அகம்புறமென்னும் இரண்டுந் தூய்தாயிருத்தல் வேண்டும். "புறத்தைத் தூய்மை செய்வது நீரலாற் பிறிதின் வேறுண்டோ" என்றபடி நஞ்சரீரஞ் சுத்தமாயிருத்தற் பொருட்டு, இரவியுதய காலையில் துயிலெழுந்து ஸ்நானஞ்செய்து, துவைத்ததூய வெள்ளை வஸ்திரந் தரித்து, பூதியணி புனித மெய்யராய் இருந்தால் ஆதியைத்தொழும் அறிவுண்டாம். புறத்தைத் தூய்மைசெய்வது அகத்தூய்மை உண்டாதற் பொருட்டே. அங்ஙனமின்றி நாடக மாத்திரையால் நடிக்கும் (உடம்பி லழுக்கைப் போக்கும் உன்னத

சோப்பணிந்து நீராடி, உயர்ந்த பட்டுகரைவேஷ்டி அரையிற்கட்டி அழகிய உத்தரீயத்தில் விளங்கும் வெள்ளிச்சரிகை இலங்க, சந்தன சுகந்தமணிந்து நெற்றியில் பொட்டுடன் புறப்படும்.) பொய்ப்புறப் புனிதத்தினால் ஆன்மா அடையும் பயன் எதுவுமின்றாம். முக்காலும் முழுகிக் குளிக்குங் காகத்தின் தன்மையதே அச்செயல்! மெய்யாத இப்பொய்யுடலின் அழுக்குப் போவதேயின்றாம். அகத்தழுக்கு அப்படியேயிருக்க புறத்தழுக்கைப்போக்குவது நன்னீரொரு சிறிது மின்றித்துன்னீரே நிறைந்துள தடாகத்தின் மேற்கட்டு அழகிய பளிங்குக் கற்களினால் சிங்காரித்துக் கட்டியதுபோலாம். நிற்க,

தூய்மையென்னுஞ் சொல் சுத்தம் என்னும் பொருள்படும்.

"தூஉய்மை என்பதவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்டவரும்"

என்னுந் திருக்குறளில் தூய்மை யென்பது அவாவின்மையென்கிறார் நாயனார். இக்குறளுரையில் ஆசிரியர் பரிமேலழகர் தூய்மை யென்பது வீடு என்கிறார். அவாவின்மையே வாய்மையை யுண்டாக்குவது. இதுவே "வாய்மையா லகந்தூய்மையாம்" என்றபடி அகத்தூய்மையாம். இதுவே புனிதம்.

உம்பர்தொழுங் கும்பயோனி உலகுதொழும் உலோபா முத்திரை யென்னுந் தன் மனைக்கு "மாதே, கேட்குதி : புனிதரென் போர் அறத்துறை பயிலும் மானத தீர்த்தத்தின் மூழ்கினோர் ஆவர். அறத்துறைபயிலும் மானததீர்த்தமாடலராகி நீராடில் புறத்தழுக்கு ஒழிவதேயன்றி புனிதராகிலர். பாராய், புனலின்மேல பொருந்தியிருக்குங் மச்சங்கள்முதலியன புனிதமெய்தினவே? மானத தீர்த்தமாவது எது என்றும், எங்கிருப்பதென்றும் கேட்பையேல் சொல்லுதும் கேட்டி.

மானத தீர்த்தமாவது:—

"சத்தியந்தானஞ் சம்மதமின் சொற்சாற்றுத லொருவழிப்படுதல்
புத்தியேமுதல கரணமோர் நான்கு மடக்குதல் புலன்கள்போம்வழியி
னுய்த்திடாதமைத்தல் பொறைதிட ஞானமுயிர்க்கெலாஞ் தண்ணளிபுரித
லித்திறமனைத்து மானதத் தீர்த்தமென வெடுத்தியம்பினர் மேலோர்."

என்றபடி சத்தியத்தையே முதலாகக் கொண்ட இப்பத்தையும் மானததீர்த்தமென இயம்பினர் மேலோர். எனவே மானத தீர்த்தமென்பது எங்கிருப்பதென்று சொல்ல வேண்டாம்.

"உள்ளத்தினுள்ளே யுளபல தீர்த்தங்கள்" என்றபடி இவையெல்லாம் நம்மகத்துளதென்பதை நீ யறிவை. என்றுரைத்தது

போல், உடலழுக்கு உதகத்தா (நீரா) லும் உள்ளத்தழுக்கு வாய்மையே முதலாம் மானத தீர்த்தத்தாலும் அகலும். மனத்தழுக்கை மாற்ற முயலுதல் வேண்டும். இல்லையேல் நமது நற்செய்கைகளெல்லாம் வியர்த்தமாம். இதனை,

> " கற்றதங் கல்வியுங் கடவுட் பூசையு
> நற்றவமியற்றலு நவையிருனமும்
> மற்றுளவறங்களு மனத்தின் பாலழுக்கு
> கற்றவர்க்கே பயனளிக்கு மென்பரால் "

எனவருங் காசிகாண்டச் செய்யுளால் அறியலாம். (தொடரும்)

---

## இரண்டு சந்தேகங்கள்.

சஞ்சிகையின் 57-வது பக்கத்தில் " ஓர் சந்தேகி " என்பவர் கேட்ட இரண்டு சந்தேகங்கட்கும் விடை.

1. மாசிநிலவு ஆகாது ஏன்:—

இதைப்பற்றி இன்னும் தக்கவிடை கிடைக்கவில்லை.

2. நாவல்களில் கதையிற் சம்பந்தப்பட்ட அவயவிகளின் பெயர்களைச் சுருக்கமாய் எழுதல்.

கதையில் சம்பந்தப்பட்ட பெயர்களை அவை வருமிடங்களிலெல்லாம் முழுப்பெயர்களையும் எழுதாமல் முதல் எழுத்துகளை மட்டும் சிலர் எழுதிவிடுகிறார்கள். கதைமுழுதும் நூற்றுக்கணக்கான பக்கங்கள் எழுதுகிறவர்களுக்கு சிலபெயர்களை முழுதும் எழுதுவது கஷ்டமாய்த் தோன்றுகிறதென்று நினைத்தற்கு இடமில்லை. இவர்கள் இதனால் அச்சுக்கூலி குறையுமென்றும் காகிதம் அளவில் குறையுமென்றும் நினைக்கிறார்களாக்கும். அவ்வாறு பெயர்களைச் சுருக்கமாய் எழுதுவதால் படிப்பவர்களுக்குக் கஷ்டமும், அடிக்கடி அட்டவணையைப் பார்த்து பெயரைத் தெரிந்து கொள்வதில் வீண் காலப் போக்கும் நேரிடுவதோடு, கதையின் சுவையை யவர்கள் இடைவிடாது அனுபவிப்பதற்கு இடையூறுகிறது. உற்சாகத்தையும் குறைந்துவிடுகிறது. சிலசமயங்களில் இருவர் அல்லது மூவர் சம்பாஷணையைப்பற்றி எழுதும்போது கேள்விக்கும் விடைக்கும் முதலில் கந்தன், நாராயணன் என்று மாறிமாறிவருவதால், முதலில்மட்டும் ஒருமுறை முழுப்பெயர்களையும் எழுதிவிட்டு பிறகு ' க ' அல்லது " கந் " என்றும் ' நா ' அல்லது " நாரா " என்றும் சுருக்கமாய் எழுதலாகும்.

மற்றபடி வாக்கியங்களினிடையில் பெயர்கள் வரும்போது எப்போதும் முழுப்பெயர்களையும் எழுதுவதே உசிதமாகும். நமது சந்தாநேயர்களில் பலரும் இதே அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

பத்திரிகாசிரியர்

---

## ஜனன ரகசியம்

(135-வது பக்கத்தொடர்ச்சி)

மேற்கூறியபடி ஒருஆன்மா புண்ணியபாபங்களை யனுபவிக்க எந்தவிடத்தில் ஜன்மிக்குமென்றும் எத்தனைதரம் ஜன்மிக்குமென்றும் வரையறுத்துக் கூறமுடியாது. ஏனெனில் நமது உலகத்தைப்போல் இன்னும் வேறுபல அண்டங்கள் இருக்கக்கூடும். சாத்திரப்படி அப்படி யிருப்பதாகவும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சர்வவல்லமையுடைய கடவுளின் சிருஷ்டியை யிவ்வளவென்று அளவுபடுத்திக்கூறமுடியாது. மேலும் கன்மத்தின் அளவாய் ஒரேகன்மத்திற்காக பலஜன்மங்களெடுக்க நேர்ந்தாலும் நேரிடும். இச்சையின்படி பிறப்புண்டாகிறது. ஒருவன் உலகவிஷயங்களில் ஆசையற்றவனாய் சத்கருமங்களையே செய்துகொண்டிருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அவன் இறக்கும்போது விசேஷ சத்கருமபலனே யிருக்கிறது. அவன் இச்சையோ ஞானநாட்டத்திலேயேயிருக்கிறது. அப்படிப்பட்டவன் (கன்ம பலனிருப்பதால் பிறவியெடுத்தே தீரவேண்டியதாதலின்) மறுஜன்மத்தில் நல்ல ஞானியாய்ப் பிறப்பான். ஆனால் அப்படிப்பட்டவன் ஒரு திரண்ட செல்வவந்தனைக்கண்டு அவன் அந்தஸ்தில் சொல்ப இச்சைமட்டும் வைத்திருப்பானேயானால் அத்தகைய செல்வக்குடும்பத்தில் குழவியாய்ப் பிறந்து சிலநாட்களாவதிருந்து இறந்து பிறகே ஞானியாய்ப் பிறப்பான்.

இவ்வாறு ஆன்மாக்கள் எடுக்கும் பிறவிகளின் அளவை யிந்தவிதம், இத்தனையென்று வரையறுத்துக்கூற ஒருவராலும் முடியாது. அதுபோலவே இறந்த ஆன்மா முதலில் பாபகன்மத்தை யனுபவிக்கக் கீழ்ஜென்மங்களிற் பிறக்கிறதென்றும் அல்லது புண்ணியகன்மத்தை யனுபவிக்க உயர்ந்த ஜன்மங்களில் பிறக்கிறதென்றும் நாம் கண்டறியமுடியாது. ஆகையால் அது பாபகன்மத்தையே முதலில் அனுபவிப்பதாய் நினைத்தே நாம் கர்மக்கிரியைகளைச் செய்கிறோம். இனி நாம்செய்யும் பிதுர்க்கர்மங்களால் இறந்த நமது முன்னோர்களுக்கு என்னபலன் கிடைக்குமென்பதை யறிந்துகொள்வோம்.

நாம் செய்யும் கிரியைகளால் நரகத்திலிருக்கும் பிதுர்க்கள் அதினின்று விடுபட்டு மோட்சமடைகிறார்களென்று பெரும்பாலோர் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். புராணங்கள் முதலிய சிலநூற்களிலும் அவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. அனேகர் அதை முழுதும் உண்மையாகவே நம்பிக்கொண்டிருக்கிறார்களாயினும், இக்காலத்தில் பலர், பெரும்பாலும் நமதுமத ஆராய்ச்சியே

யின்றி ஆங்கிலம் கொஞ்சம் கற்றவர்கள் "Damn nonsense, stupidity, all quite false. இதெல்லாம் அடியோடுபொய். பிராம்மணர் பணம் பரிக்க வெண்ணி இப்படிக்கெல்லாம் எழுதி வைத்துக்கொண்டார்கள்" என்கிறார்கள்.

நமது முன்னோர் சற்றும் பயனில்லாத எந்த ஏற்பாட்டையும் செய்திருக்கவில்லையென்பது திண்ணம். அவற்றின் உண்மைக்காரணங்கள் மறைந்திருக்கின்றன. நாமும் அவற்றை யாராய்ந்தறிய முயல்வதில்லை. அப்படியாயின் பிதுர்க்கர்மம் செய்வதால் நமது முன்னோர், நரகத்தைவிட்டு மோட்சத்திற்குப் போய்விடுவார்களா? என்கிறீர்களோ. அப்படிக்கில்லை. அப்படிச் செய்வதாயின் பணமுடையோர் அனைவரும் தங்கள் முன்னோரை மோக்ஷத்திற் கனுப்பிவிடலாம். இவ்வாறே பிராயச்சித்தம்செய்தால் பாபம் நீங்கிவிடுமென்பதும். ஒருநூலில் பெரிய ஹத்தி (பிரம்மஹத்தி) செய்துவிட்டால், நவக்கிரக உருவங்களைக் கெட்டித் தங்கத்தால் செய்து பிராமணர்களுக்குத் தானம்கொடுத்தால் அந்தப்பிரம்மஹத்திதோஷம் நீங்கிவிடுமெனவும், ஒருவன் இறந்தபிறகு எமதூதர்கள் அவனது யாதனுசரீரத்தைப் பிடித்துக் கொண்டு எமனுலகத்திற்கு அழைத்துச் செல்லுகையில் வழியில் வைதரணி என்ற நதியிருக்கிறதென்றும், அதில் புழுக்கள் நெளியும் இரத்தமும் சீழும் கலந்தவெள்ளம் ஓடிக்கொண்டிருக்குமென்றும், எமதூதர் இறந்தவன் யாதனு சரீரத்தை அதில் அமிழ்த்துவார்களென்றும், இறந்தவன் இறந்த உடனே யாவது இறக்கும் தருவாயிலாவது ஒரு பிராமணனுக்கு ஒருபசுவைத் தானம் செய்தால் அப்பசு அங்குவந்து இறந்தவனை வைதரணி ஆற்றைக்கடத்தி அப்புறம் கொண்டுபோய்விடுமென்றும் எழுதியிருக்கிறது. அந்த புஸ்தகத்திற்கு கருடபுராணம் என்றுபெயர். இத்தகைய புத்தகங்கள் தோன்றாமலே யிருக்குமாயின் மிக்க நலம். இதெல்லாம் உண்மையாயின், அவரவர்கள் செய்தவினை அவரவர்கள் அனுபவிப்பார்கள் என்று கூறும் பிரபல சுருதிகள் பொய்யாய் விடுவதோடு பணமுடையவன் மோக்ஷமடையலாமாதலால் பணமே கடவுளாய்விடும். வேறு கடவுள் வேண்டுவதில்லை.

அப்படியானால் பாபத்திற்கு பிராயச்சித்தம் ஒருபயனுமில்லையோ வெனின், அப்படியுமன்று. அது பாபத்தை யடியோடு போக்கடிக்காது. செய்தவினையை யனுபவித்தே தீரவேண்டும். பிராயச்சித்தத்தால் ஒருவித பயனுண்டு. அதாவது அதைச்செய்யும் சிரமையால் ஏன் அந்த பாபத்தைச் செய்தோம் என்று மனஸ்தாபமடைந்து இனி மறுபடி யப்படி செய்யாதபடி எச்சரிக்கையாயிருப்பான். அதோடு பிராயச்சித்தத்தில் செய்யும் தானதருமங்கள், தெய்வவழிபாடு, முதலியவற்றால் புண்ணியம் பெறுகிறான். இவ்வளவே பிராயச்சித்தத்தால் உண்டாகும் நலம்.

இவ்வாறே பிதுர்க்கர்மத்தாலும் பிதுர்க்கள் நரகை விட்டு மோக்ஷம் போவதில்லை. ஆனால் நரகத்தில் அவர்கள் படும் துன்பம் ஒருவாறு குறையும். எப்படியெனில், ஒருவன் இறந்த இவ்வுலகத்திற்கும் (அவன் ஆன்மா நரக

சொர்க்கங்களில் ஜனித்திருக்கும்போது) அவன் ஆன்மாவிற்கும் சம்பந்தமாய் ஒருவிதக் கம்பி யுண்டென்று முன்னம் கூறினோமல்லவா? இதன்வழியாய் நாம் அந்த ஆன்மாக்களுக்கு உதவியனுப்பவேண்டும். என்ன உதவியை எப்படியனுப்புவதெனின், நாம் புசிக்கும் பதார்த்தங்களில் மாமிசத்தை வளர்க்கும் ஒருவித சத்தும், ஆன்மச்சூட்டை வளர்க்கும் ஒருவித சத்தும் ஆக இரண்டுவித சத்துக்கள் இருக்கின்றன. நாம் செய்யும் பிதுர்க்கர்மத்தின் முக்கிய அம்சம் பிண்டப்பிரசாதம் என்பதே. அதாவது பச்சரிசி, பால் நெய் முதலிய சத்துவ பதார்த்தங்களிலுள்ள மேற்சொன்ன ஆன்மச்சூட்டை வளர்க்கும் சத்தை மந்திரபலத்தால் முன்கூறிய கம்பிவழியாய் அனுப்பவேண்டும். அப்படியனுப்பினால் நரகிலிருக்கும் ஆன்மாவின் வேதனைச் சற்று அதற்கு உறுத்தாதிருக்கும். எப்படியெனில் ஒருவன் தேகத்தில் ஒரு விதப் புருதி புறப்பட்டு வேதனைப்படுகிறான். அவனுக்கு ஏதாவது மயக்க வஸ்து வளித்தால் அவனுக்கு அந்தக் கட்டியால் வேதனையுண்டாவது நிற்காதெனினும், அவன் அதை யுணராது சற்று நிம்மதி யடைகிறானல்லவா? அதுபோலவே நரகிலிருக்கும் ஆன்மாவின் துன்பம் அதற்குச் சற்று உறுத்தாதிருக்கும்.

மந்திரத்திற்கு அத்தகைய வல்லமை யுண்டோவெனின் உண்டென்றே மேல்நாட்டு சாஸ்திரிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எவ்வாறெனில் சப்தத்திற்கு ஒருவித வல்லமையுண்டு. மந்திரம், வார்த்தைகள் ஒலியின் வடிவமன்றி வேறில்லை. இதைப்பற்றி விருக்கிற் பெருகும். ஆனால் அந்த மந்திரத்தை உச்சரிக்கும் பிராம்மணர் சுத்தமனமுடையவராய் அதற்குள்ள விதிப்படி யாவற்றையும் செய்யவேண்டும். அத்தகைய பிராம்மணர் இக்காலத்தில் எத்தனைபேரிருக்கிறார்களென்பதை அறிவாளிகளே யறிந்துகொள்ளவேண்டும்.

மேற்கண்ட விஷயங்களில் சில நமது புராணங்களுக்கும், வேறு சில நூற்களுக்கும் மாறாய்த் தோன்றக்கூடும். சரியை, கிரியை நீங்கலாக யோக ஞானங்களைப்பற்றிய விஷயங்களிலும், சிருஷ்டியைப்பற்றிய விஷயங்களிலும் அனேகம் மறைவாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. மந்த அதிகாரிகளுக்குத் தக்கவிதமாய் அனேக விஷயங்கள் மாற்றியும் உருவகப்படுத்தியும் கூறப்பட்டிருக்கின்றன. நுண்ணறி வுடையோர்க்கு உண்மையின்னதுதானென விளங்கினும் மந்த அதிகாரிகளுக்கு அவர்களின் நன்மைக்காகவே அதை வெளியிடுவதில்லை. மந்த அதிகாரிகள் பாபத்துக்குப் பயந்து நடக்கவேண்டுவதற்காக பிறப்பின் விஷயத்தைப்பற்றி கூட பலவாறாய் நூல்களில் கட்டுக் கதைகளெல்லாம் கூறப்பட்டிருக்கின்றன.

(தொடரும்)

## உபாத்திமைத் தொழில்.

இவ்விஷயத்தை இனிது தொடுத்து முடிக்கில் மிக விரியுமாதலான், சுருக்கமாய்ச் சிறிது கூறுவாம்.

பெரும்பாலும் உபாத்தியாயர்கள் அரசினர் நிபந்தனைக்கேற்பப் பாடசாலைப் பாடங்களில்மட்டும் சிரத்தை யெடுத்துக் கொள்வதையே தங்கள் தொழிலின் இலக்காக எண்ணியிருக்கிறார்களேயன்றிப் பிள்ளைகளின் நல்லொழுக்கவளர்ச்சியை எட்டுணையுங் கவனிக்கின்றிலர்.

உபாத்திமைத்தொழிலின் உத்தரவாத மின்னதென்பதை உணர்ந்த சிறந்த ஆசிரியர் கல்விவிஷயத்திலும் பிள்ளைகளின் நல்லொழுக்கத்தையே இனிதாகவனிக்கவேண்டும். நம்நாட்டிலுள்ள சிறு பாடசாலைகளில் கல்வியயிலும் மாணவர், பெரியோர், பெற்றோர், முதலியவர்களுக்குச் சிறிதும் மரியாதையின்றி நடப்பதைக் காண்டல் எத்துணை விசாரமானது? கல்வியில் நாளொருவண்ணம் வளருமாப் போல் நல்லொழுக்கத்திலும் பிள்ளைகள் வளரவேண்டுமென்பது ஆசிரியரின் விருப்பமாயின், யாங்கூறு மிவ்வசனம் பிரயோசனமற்றதாகாது. பெரியோர் விஷயத்தில் பிள்ளைகள் கீழ்க்கண்ட விதிகளை அனுசரித்து நடக்குமாறு உபாத்திமார் கற்பித்தல் வேண்டும்:—

(1) பெரியோர்க்கு வழிவிலகிநிற்றல்; (2) அவர்களை முன்விட்டுப் பின்செல்லல்; (3) அவர்களிருக்கு மாசனத்தில் அல்லது சரியாசனத்தில் உட்காராதிருத்தல்; (4) அவர்கள்முன் அங்கசேட்டை செய்யாதொழிதல்; (5) அவர்களிடம் மரியாதையாய்ப்பேசல்; (6) இருகரமும்நீட்டிப் பொருள் வாங்கல் கொடுத்தல்; (7) (கைகுவித்து) வந்தனஞ்செய்தல்; (8) தம்வீட்டில் முதியோர்வரின் எழுந்து மரியாதைசெய்தல்; (9) அவர்கள் திரும்பிச்செல்லும்போது சற்று தூரம் பின்சென்று வழிவிட்டுவருதல்; (10) அவர்கள்முன் தேகத்தின் பின்புறத்தைத் திருப்பாதிருத்தல், ஆதிய மரியாதைக்குணங்கள் பாலரிலமையுமாறுசெய்தல் ஒவ்வோர் ஆசிரியர்மேலும் விழுந்த கடமையாகும். இவற்றை இளம்பிராயத்திற் பயின்றிருக்கும் மாணவர் நாளடைவிற் சற்குணராவது திண்ணம். அம்மம்ம! இன்னோர் கொடியபழக்கம் நம்நாட்டுச் சிறுவரை வாட்டத்தொடங்கிற்று. அஃதுதான் புகைக்குடித்தல். இக்கொடியநோய் பிள்ளைகளுட் பரந்து அவர்க ளாயுள்காலமட்டும், பலவிதத்திலுந் துயர்விளைப்பதைத் தடுத்தற்கு ஆசிரியரையன்றி வேறு யார் வல்லார்?

இனி உபாத்தியாயர் பிள்ளைகளையும், பிள்ளைகள் உபாத்தியாயரையும் நேசிக்கும்படி நடத்தல்வேண்டும். எப்பையனிடம் ஆசானுக்கருள்உளதோ அப்பையன் நாளாவர்த்தியிற் சிறந்தவனாய் வருதல் நாங்கண்டவிஷயம். ஆசானைக்கண்டதே கருடனைக்கண்ட பாம்புபோற் பிள்ளைகள் கரவாமல், சந்திரனைக்கண்ட அல்லிபோல் களிப்

படைய நடத்தலே சிறப்பாம். சிலஆசிரியர் பிள்ளைகள்மேல், கடுக டென்று எப்போதும் மூர்க்கங்கொண்டு, கோலுங் கையுமாய் அடியே ஆசானென்ன நடத்தலால் பெருங்கேடுகள் விளைகின்றன. தண்டனை மாணுக்கனுக் கேற்பப் புத்தியினுலும், கண்ணினுலும் பேச்சினுலும், முகத்தினுலும் ஓரோர் சமயம் பிரம்பினுலுமேயன்றி, எடுத்ததற்கெல்லாம் நொடுக்கெனத் தட்டல் நன்ருகா.

ஒரு சிறந்த ஆசிரியர் தமது சாதுரியத்தினுலும், அன்பாய் நடத்துகிறதினுலும் சூட்சுமபுத்தியினுலும் நல்லொழுக்கத்தைப் பிள்ளைகளுட் பரப்பலாம். உதாரணமாக ஒருபையன் நித்தமும் உயிர் வதை செய்கிறவனுயிருந்தால் அவனைப்பார்த்து,இப்பையன் இப்போ நல்லவன், கெட்ட குணங்களில்லை, அதனுல் நான் சந்தோஷப்படு கிறேன். எனப் பொய்யாகப் புகழ்ந்தால், உண்மையில் அவன் துர்க் கிருத்தியங்களை விட்டுவிடக்கூடும். இப்படியே ஒவ்வொரு கருமத் தையுந் தண்டனையின்றிப் புத்தியால் பிள்ளைகளை நல்லொழுக்கவழி யில் நடத்தலாம்.

பாடசாலை நேரத்தின்பின் சிலபிள்ளைகள் ஒணுன் பூனை கார்த் திகைப்பூச்சிமுதலிய ஜெந்துக்களைப்பிடித்து இடுக்கணித்து இன்புறு வதை நாம் பலமுறை கண்டுங் கேட்டு மிருக்கலாம். இதுவே நாளடைவில் முற்றிப் பெரியவராகும்போது "உயிர்மேல் இரங்கல்" இல்லாமற் செய்துவிடும். இக்கேடானசெய்கை பாவமென்ப தைப் பிள்ளைகள் உணருமாறு பரிசுத்த வசனத்தால் அவர்கள் இரு தய சுக்காணைத் திருப்பிநடத்த உபாத்தியாயரே சிறந்த கருவியாகும்.

இவைகளிலிருந்து ஆசிரியருக்கு எவ்வளவு புண்ணியமுண்டு. தன்மாணவர் சற்குணராவதைக் காணுதலே ஆசிரியருக்கு அடங்கா மகிழ்ச்சியைக்கொடுக்கும். இதை அநுபவசித்தமாயறியலாம்.

உலகில் இருபகுதியார்க்கும் நன்மை பயக்கும் தொழில் இதை விட வேறெதுஉண்டு? நன்மை, மரியாதை, அறம், ஆகிய விதை களை பிள்ளைகளின் இதயமாகிய பூமியில்நட, உபாத்தியாயராலேயே யன்றி வேறுயாராலுமாகுதல் அசாத்தியம். புத்தியுள்ள பெற்ருேர் தங்கள் பிள்ளைகளின் நல்வளர்ச்சிக்கு உபாத்தியாயரை யெதிர்பார்த் திருக்கவேண்டியதில்லை.

அன்பான சகோதரரே! ஆசிரியர்களே, அரிய இரத்தினங்கள் போற் கடவுள் உங்கள் கையில் ஒப்படைத்த இனிய குழவிகட்கு நீங்களே உத்தரவாதிகளாயிருப்பதால் எவரும் இப்பிள்ளையின் பெற் ருேர் பாக்கியவான்களெனும்படி நன்னெறியில் நடத்துவீர்களாக.

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருே னெனக் கேட்டதாய்"

என்றபடி பாலரின் நடக்கையைக்கண்டு களிப்புறல், பெற்ருர் உபாத் தியாயர் ஆகிய இருபாலார்க்கும் மனநிறைந்த மாட்சியாயிருக்கும் என்பதில் தடையில்லை.

## மாணவர் பக்கம்

(127-ம் பக்கத் தொடர்ச்சி.)

சீர்திருத்தம்செய்ய முன்வருவோர்கள் முதலாவது சிறுவர் சிறுமிகளுடைய நடையுடை யொழுக்கங்களைச் சீர்திருத்த முயல் வதே சீர்திருத்தத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டியதாகும். அவர் களே பிற்காலத்தில் பெரியமனிதர்களாய் முன்வந்து தாய்நாட்டின் க்ஷேமத்திற்காக உழைக்கப்போகிறவர்கள்.

ஆகையால், மாணவர்களாகிய சகோதரர்களே! இதுவிஷயத் தில் நீங்களே சிரத்தை யெடுத்துக்கொண்டால் பெரியோர் செய்ய வேண்டிய அரியகாரியத்தை நீங்களே செய்துமுடித்ததாக அழியாப் புகழை யடைவீர்கள். இந்தியவாலிபரின் பெயர் உலகெங்கும் புகழப் படும். நாம் சிறுவர்களாயிற்றே, நாம் எப்படி இதைச் செய்து முடிப்போமென்று அச்சங்கொள்ளாதீர்கள். உங்கள் உருவம் சிறிதே யன்றி உங்கள் அறிவு சிறிதல்ல. உங்கள் தேசத்தில் மகரிஷி களுடையவும், ஆத்மஞானிகளாகிய மகான்களுடையவும், தெய்வீக மும் அபூர்வமுமாகிய பிரம்மாண்டமான காரியங்களையெல்லாம் அலட்சியமாய்ச் செய்துமுடிக்கத்தகும் சக்திபொருந்தி யிருந்தவர் களும், அஷ்டமாசித்திகளும் கைவந்தவர்களுமாகிய வல்லவர்களு டைய இரத்தம் உங்கள் நாடிகளில் ஓடிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை ஒருபோதும் நீங்கள் மறக்கலாகாது. அவர்கள் கௌரவத்திற்கும்பெருமைக்கும் இழிவுதரத்தக்க எந்தச்செய்கையை யும் செய்யாதபடி நீங்கள் மிக்க ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

இப்போது உங்களுக்குள் மாணவர்சங்கம் என்று சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றின்மூலமாய் நீங்கள் நல்ல சீர்திருத்தங் களை யுண்டாக்கிக்கொள்ளக்கூடும். அச்சங்கங்களில் அறிவாளிகளா யுள்ளோர் ஒன்றுகூடி இன்னின்ன சீர்திருத்தங்களை யுண்டாக்க வேண்டுமென்று குறிப்பிட்டுக்கொண்டு ஒவ்வொன்றாய் நடைபெறச் செய்யவேண்டும். அச்சீர்திருத்தங்களைப் பெரிய இரண்டு பிரிவுக ளாக்கிக்கொள்ளலாம். அதாவது மாணவர்கள் செய்யத்தகாத காரி யங்கள் இன்னவையென்றும், செய்யவேண்டியகாரியங்கள் இன் னவையென்றும் இரண்டுபிரிவுகளாக்கிக் கொள்ளவேண்டும். திருஷ் டாந்தமாய் இரண்டொன்று கூறுகிறோம்:—

(1) மாணவர்களில் ஒருவரும் சிகரெட், பீடி, சுருட்டு முதலிய வை பிடிக்கவுங்கூடாது, அப்படி பிடிப்பவர்களோடு சகவாசம் செய் யவும் கூடாது.

(2) வகுப்பில் கணக்குப்போடும்போதாவது, வேறு எந்தபாடங் களிலாவது, உபாத்தியாயருடைய கேள்விகளுக்கு மாணவர்கள் பலகையிலோ, நோட்டு புஸ்தகத்திலோ விடைகளை எழுதிக்காட்டும் காலத்தில் ஒருவர் மற்றொருவரைப்பார்த்து எழுதிவிடலாகாது,

அதாவது 'காபி' யடிக்கலாகாது. சினேகிதருயிற்றேயென்று ஒருவன் மற்றொருவனுக்குக் காட்டலாகாது. அப்படிக் காட்டுகிறவன் உண்மையில் தன் சினேகிதனுக்குக் கெடுதியே செய்கிறான். 'காபி' யடிப்பதும் திருடுவதற்குச் சமமே.

(3) ஒவ்வொருவரும்காலையில் எழுந்தவுடனேகடவுளைத்துதிக்க வேண்டும். இரவில்படுக்கைக்குச் செல்லும்போதும்துதிக்கவேண்டும்.

(4) நமது தாய்ப் பாஷையை ஒருபோதும் அலட்சியம்செய்யலாகாது. பாடசாலையில் வித்தியா இலாகா ஏற்பாட்டின்படி தாய்ப் பாஷை நமக்குப்போதுமான அளவு போதிக்கப்படாததால் அதை நாமே படித்து விர்த்தி செய்துகொள்ளவேண்டும்.

(5) உபாத்தியாயரைத் தாய் தந்தையைப்போல் மதித்து நடக்க வேண்டும்.

(6) நமது முன்னோர் ஆசார ஒழுக்கங்களை ஒருபோதும் கைவிடக்கூடாது.

* * * * *

என்று இம்மாதிரி விதிகளை யேற்படுத்திக் கொண்டு அதின்படி நடந்து வந்தால் உங்களால் நமது நாடு முன்னுக்கு வருவதில் சந்தேகமேயின்றாம்.

ஒருவிஷயத்தை மட்டும் நீங்கள் உறுதியாகவும் சத்தியமாகவும் நம்பி அதன்படி கவனம்வைத்து நடக்கவேண்டும். அதாவது:—

நமது நாடு க்ஷேமமடைந்து முன்னுக்கு வருவதற்கும், நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் நாம் பெறுவதற்கும் நமக்கும் இன்றியமையா ஆதாரமாகிய அஸ்திவாரக் கல்லானது நமது மதாசாரமே. ஆகையால் நமது மதாசார ஒழுக்கங்களை நாம் மறந்தும் கைவிடலாகாது.

நமது வேதங்களில் அடங்கி யிராத சாஸ்திரமாவது சீர்திருத்தமாவது உலகில் வேறில்லை. இவ்வுலகில் இப்போதிருக்கும் எல்லா மதங்களைப்பற்றியும், இனி உலகில் உண்டாகக்கூடிய எல்லா மதங்களைப்பற்றியும் நமது வேதத்தில் கூறப்பட்டே யிருக்கிறது. "உலகிலிருப்பனவும் இனி யுண்டாகக் கூடியனவுமான எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரம் ஹிந்துக்களுடைய மதத்தில் இருக்கிறது" என்று மத ஆராய்ச்சியில் பிரக்யாதி பெற்ற மேல்நாட்டு சாஸ்திரிகளே வெளிப்படையாய்க் கூறியிருக்கின்றனர். (தொடரும்)

---

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

(ஓர் சிறு கதை)

கடவுள் எப்போதும் பூரண கருணையுடையவர். கருணையே உருவமாயுடையவர். ஆகையால் யார் அவரிடத்தில் மனப்பூர்வமான நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்கள் அகத்தியம் காப்பாற்

றப்படுவார்கள். இதற்கு எண்ணிறந்த அத்தாக்ஷிகளுண்டு. இங்கு இதை நிரூபிக்க ஒரு சிறு கதையை மட்டும் கூறுகிறோம் :—

வடக்கே நர்மதை யென்ற ஒரு நதியுண்டு. அந்நதியின் இருபுறமும் பெரும்பாலும் அடர்ந்த காடுகள் உண்டு. அவற்றில் கரடி, புலி, சிங்கம் முதலிய துஷ்டமிருகங்கள் ஏராளமாய் வசித்துக்கொண்டிருப்பது வழக்கம். நதியிலோ கொடியமுதலைகள் ஏராளமாயுண்டு.

ஒருநாள் பூரண தெய்வ பக்தியுள்ள ஒரு பிராம்மணர் சற்று தூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்து தன் ஊருக்குத் திரும்பிப்போகிறார். அவர் ஆற்றின் கரையோரமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் பக்கத்திலுள்ள புதரில் சலசலவென்ற சத்தமுண்டானதைக்கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தார். புதருக்குள் சமீபத்திலேயேயிரண்டு கொள்ளிக்கட்டைகள் பிரகாசிப்பதுபோல்தெரிந்தது. மறுவிநாடி ஒரு பெரிய வேங்கைப்புலியின் தலை மேலே கிளம்பியது.

பிராம்மணருக்குப் பாதி ஆவி யொடுங்கிவிட்டது. அதற்குள் புலியும் அவர்மேல் பாய ஆரம்பித்தது. பிராம்மணர் ஆற்றில்குதித்து அக்கரை சேர்வதாகிய ஒருவழிதானிருக்கிறதென்று ஆற்றில் குதிக்கப்போனார். ஐயோ! அங்கேயொரு முதலை ஜலத்தின்மேல் தலையைக் காட்டிக்கொண்டு, யாராவது வந்து ஆற்றில் இறங்கமாட்டார்களா, அவர்களைப்பிடித்துத் தின்று நமது பசியை யாற்றிக்கொள்ள மாட்டோமாவென்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தது.

பிராம்மணர் என்னசெய்வார் பாபம். கரையில் நின்றால் இன்னும் இரண்டொருவினாடியில் புலிக் கிரையாவது நிச்சயம். ஆற்றில் இறங்கினாலோ முதலை பிடித்துக்கொள்ளும். அவருக்கொன்றும் தோன்றவில்லை. ஆயினும் பார்வைக்கு ஜலத்திலுள்ள முதலையைக் காட்டிலும் கரையிலுள்ள புலி அதிகபயங்கரமாய்த் தோன்றுவதால்,

"ஓ பரமதயாநிதி! நீயேகதி" என்று கூவிக்கொண்டே பாய்ந்து ஆற்றில் குதித்தார். அவர் குதித்தவிடத்திலிருந்து இன்னும் இரண்டு கஜதூரத்தில் தான் முதலையிருக்கிறது. முதலை பிராம்மணர் குதித்ததைக்கண்டதும் அவரைப்பிடிக்கச் சட்டென்று நீரில்முழுகத்தொடங்கிற்று. ஆனால் அதற்குள் புலியும் மிக்க பசியோடிருப்பதால் பிராம்மணன் எங்கே தப்பித்துக்கொண்டு போய்விடுகிறானோ வென்று அதிவேகமாய் ஆற்றில் பாய்ந்தது.

ஆனால் புலிபாய்ந்த வேகத்தால் பிராம்மணரைத் தாண்டிப் போய் நேராய், அப்போதுதான் ஜலத்தில் முழுக ஆரம்பித்த முதலைமேல் குதித்தது. முதலை எட்டவிருப்பதிலும் கையில் சிக்கியதே மேலென்று புலியைப் பிடித்துக்கொண்டது.

பிராம்மணர் நடந்த சம்பவத்தைக்கண்டதும் சட்டென்று கரையேறி ஓரே ஓட்டமாய்த் தன் இருப்பிடம் சேர்ந்து ஆண்டவன் கருணையைவியந்து புகழ்ந்துபாடினார்.

## ஸ்திரீகள் பக்கம்.

(132-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேற்கூறியபடி மாமியார் மருமகள் இருவரும் நடந்து கொண்டால் அம்மனை ஆனந்தாலயமா யிருக்கும் என்பதிற் றடையில்லை. அப்படிக்கின்றி இருவரில் ஒருவர் அவ்வாறு நடந்துகொண்டாலும் நாளடைவில் அவ்வீட்டில் சந்தோஷமும் மனோ நிம்மதியும் உண்டாகும்.

சில மருமக்கள்மார் தாங்கள் கொஞ்சம் படித்திருப்பது கொண்டு கல்வி வாசனையில்லாத தங்கள் மாமிமார்களை மிக்க அலட்சியமாய் நடத்தி வருகிறார்கள். சில மருமக்கள்மார் தாங்கள் அதிக செல்வம் பொருந்திய குடும்பத்திலிருந்து வந்ததால் ஒருவித அகங்காரமும் பெருமையும்கொண்டு, மாமிமாரை அலட்சியமாயும் அவமரியாதையாயும் நடத்துகிறார்கள். அந்தோ! படிக்காதவர்கள் தான் அப்படிச் செய்கிறார்கள். படித்தவர்கள் கூடச் செய்வார்களோ வென்றால், அவர்கள் படிப்பு அரைப்படிப்பானதால் ஆபத்துக்கிடமா யிருக்கிறது. இதனாற்றான் நமது பெண்களுக்குக் கல்வி யவசியமாயினும் அது தக்க கல்வியா யிருக்கவேண்டும். அதாவது அவர்கள் குடும்பத்தில் புருடன், மாமனார், மாமியார் முதலியவர்களிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறைமையும், பிள்ளைகளை வளர்க்கவேண்டிய முறைமையும், குடும்பத் தொழில்களைக் கவனிக்கவேண்டிய முறைமையும், ஈச்வர வழிபாடும் ஆகிய இவற்றைப் போதிக்கத் தக்க கல்வியாயிருத்தல் வேண்டும்.

ஜப்பான் தேசத்தில் எவ்வளவு செல்வவந்தன் மனைவியாயினும், கவர்னர் மனைவியாயினும், யாவர்க்கும் முன்பு அதிகாலையில் எழுந்து வேலைக்காரனை யெழுப்பி வெந்நீர் வைத்துத் தானே கொண்டுபோய் மாமனார் மாமியார் புருடன் இவர்களுக்குக் கொடுத்துவிட்டு அவர்கள் படுக்கைகளைச் சுருட்டி வைப்பது நாளைக்கும் வழக்கமாய் நடந்து வருகிறது.

செல்வக் குடும்பத்திலிருந்து சற்று ஏழையா யிருக்கும் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்ட மருமக்கள்மாரிற் சிலர் புருடன் முதல் ஒருவரையும் லட்சியம் செய்வதில்லை. வீட்டில் மாமியார் வேலைக்காரர் முதலியவர்கள் அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளைச் செய்துகொண்டிருக்க, வீட்டெஜமானியாகிய மருமகள் தன் கணவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைக் கூட கவனியாமல் காலை 8 மணி வரையில் படுக்கையைவிட் டெழுந்திருக்காமலே யிருக்கிறாள். இதற்கெல்லாம் சரியான கல்வி யறிவில்லாதது ஒரு காரணமேயெனினும், இதற்கு மூலகாரணம் புருடர்களுடைய அஜாக்கிரதையான நடக்கையே. இவ்வாறு அஜாக்ரதையான நடக்கையால் சில புருடர்கள் தங்கள் மனைவிமாருக்குக் கெட்டபெயரை யுண்டாக்கி விடுவதோடு தங்களுக்கும் தீரா மனோவியாகுலத்தை யுண்டாக்கிக் கொள்கிறார்கள். ஆகையால் புருடர்கள் ஆரம்பத்திலிருந்தே சில விஷயங்களைக் கவனித்து நடந்து வரவேண்டும். அவற்றில் சில கூறுகிறோம். முக்கியமாய் வாலிபர்கள் இதை அவசியம் கவனிப்பது நலம் :—

ஒரு மாது பல இராஜ்ஜியங்களை யாளும் ஏகசக்ராதிபதியாகிய சக்ரவர்த்தியின் மகளேயாயினும் தன் கணவனுக்கு அவள் மனைவியே. அவன் ஆக்கினைக்கு அடங்கி நடக்கவேண்டியவளே. தன் புருடன் கல்வியில்லாதவனாயினும், பரம ஏழையாயினும் அவனிடத்தில் பயமும் பக்தியும் வைத்து நடந்து கொள்ள வேண்டியவளே.

அப்படியிருக்கச் சில புருடர்கள் புதிதாய்த் தாங்கள் காணும் மனைவியிடத்தில் ஒருவித பிரமிப்படைந்து குடும்பத்தில் தங்களுக்குள்ள தலைமை

ஸ்தானத்தை யவர்களிடம் ஒப்பித்துவிட்டு அவர்கள் பிரியப்படி நடக்கும் அடிமைகளாய் விடுகிறார்கள். இந்த அறியாமையால் பிறகு அவர்கள் மிக்க மனவருத்தப்பட நேரிடுகிறது. இச் சந்தர்ப்பத்தில் புருடன் ஆரம்பத்தில் தன் ஆட்சியை யிழந்துவிடுவானுயின் மறுபடி யதைக் கைப்பற்றுவது அசாத்தியமேயாகும்.

புருடனுக்குத் தன் தாய் தந்தையிடம் பக்தியும் விசுவாசமும் இருக்கிறதென்றும் அவர்களைத் தான் அலட்சியமாய் நடத்தினுல் கணவனுக்குத் தன் மேல் மனவருத்த முண்டாகு மென்பதை யுணர்ந்தால் அந்த மனைவி தன் மாமியார் மாமனுரிடம் ஒருபோதும் அலட்சியமாய் நடந்து கொள்ளமாட்டாள்.

புருடன் குடும்ப விஷயங்களில் தன் ஆணை தடைபடாது நடக்கிறதாவென்பதைக் கவனிக்கவேண்டும். "நமது புருடன் எந்த விவகாரத்திலும் தன் பிரியப்படி நடப்பானேயன்றி நாம் சொல்கிறபடிக்கெல்லாம் கேட்கமாட்டான்" என்ற உண்மை மனைவியின் மனதில் நன்ருய்ப் பதிந்து விடவேண்டும். அதைவிட்டு மனைவி, "என் கணவன் என் வார்த்தையைத் தடுக்கவேமாட்டார். நான் வேண்டாமென்றதைச் செய்யவேமாட்டார்" என்று கூறிக் கொள்ளும்படி புருடன் நடந்துகொள்வது அறிவீனமாகும். அப்படி நடந்துகொண்டால் மனைவியால் அனேக விஷயங்களுக்கு இடையூறு நேரிடுவதோடு புருடனுக்கு மனவருத்தமு முண்டாகுமென்பது உண்மை.

இக்காரணத்திற்காகவே பெண்பாலாகிய ஒளவையாரே "தையல் சொற் கேளேல்" என்று கூறி யருளினுர்கள். அதனுல் மனைவியின் வார்த்தைக்கெல்லாம் நேர் மாருகவே நடக்கவேண்டுமென்பது கருத்தல்ல. தக்க சமயத்தில் கணவனுக்கு மனைவி நீதிபோதிக்கவும் நல்வழிகாட்டவும் பாத்தியமுடையவளே. கணவன் சில விஷயங்களில் மனைவி அபிப்பிராயத்தையும் அனுசரித்து நடக்கவேண்டியவனே. ஆனுல் அவர்களையே அதிகார ஸ்தலத்தில் வைத்துவிட்டு எல்லா விஷயங்களிலும் அவர்கள் பிரியத்தைக்கேட்டு அதன்படி நடப்பது புருடர்களில் அறிவில்லார் செய்கையேயாகும். தன் மனசாட்சிக்குத் தகுதியான காரியமேயென்று தோன்றுவதைச் செய்வதற்கு மனைவியின் அங்கீகாரத்தை யெதிர்பார்ப்பது தீமையாகவும் அவமானமாகவுமே முடியும்.

இதற்கு அனுபவமான ஒரு திருட்டாந்தம் கூறுகிறேம். 'க' என்ற ஒரு பெரியமனிதர் தன் நண்பர்களோடு பேசிக்கொண்டிருக்கையில் காசியிலிருந்து வந்திருக்கும் ஒரு மகானுக்கு தினம் ஒவ்வொருவர் அமுதளிப்பதென்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். "க" என்பவர் தன்முறை வந்த தினம் காலை மனைவியிடம் "நடந்த ஏற்பாட்டைக்கூறி, இன்றைக்கு நாம் அந்த மகானுக்குப்போஜனம் அளிக்கவேண்டும்; சீக்கிரம் நாலைந்து கறிவகைகளோடு சமையலாகட்டும்" என்ருர்.

அவர் மனைவி முகத்தைச்சுளித்துக்கொண்டு கோபத்தோடு "நல்லவேலை. எவனே காசியிலிருந்து வந்தால் உனக்கென்ன, மாமனு மச்சானு. வருகிற தடியன்களுக்கெல்லாம் வெவிச்சிக்கொட்ட இங்கேயாரும் உறுதியாயில்லை. என்னுலாகாது" என்ருள்.

பெரியமனிதர் முகவாட்டமடைந்து, "ஐயோ, எல்லாரும் ஏற்பாடு செய்ததுபோல் நானும் ஒப்புக்கொண்டு வந்துவிட்டேனே. அவமானமாய் முடியுமே" என்று வேண்டிக்கொண்டார்.

அந்த இராக்ஷஸி—"இதிலெ அவமானமென்ன. எங்கூட்டே பொண்டு வங்கோ காயலாவென்று தாயார் வீட்டிற்குப் போயிருக்கிறார்கள் என்று சொல்லிவிடு. அவங்கள் தான் வேலையத்தவன்கொ போட்ராங்கோ" என்றாள்.

இப்போது புருடன் மனநிலைமை யெப்படியிருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். "க" என்பவர் ஒவ்வொருவிஷயத்திலும் மனைவி அபிப்பிராயப்படி நடந்துவர ஆரம்பித்ததால் இம்மாதிரியாய்விட்டது. கணவன் கட்டளைப்படி நாம் நடக்கவேண்டும், இன்றேல் நமது பதவி போய்விடும் என்ற அச்சம் மனைவிமனதில் படிந்திருக்கும் வண்ணமாய்ப் புருடன் நடந்துகொண்டிருந்தால் இப்படிநேரிடாது. முதலில் மதிமயங்கி தனக்கு வெகுவாய்ப் பிரியமில்லாத விஷயத்தைக்கூட மனைவிசொல்லைத் தள்ளக்கூடாதென்று பயந்து நடந்தால், பிறகு நமக்கு நேர்விரோதமானதையும் செய்யவேண்டி நேரிடும். இதனால் நமக்கே மனோவியாகுலமும் அவமானமும் நேரிடும். அவமானமெப்படியெனில் மேற்கூறியவாறு வாக்குக்கொடுத்ததைச் செய்யத்தவறுவதாலும், அன்னியர் "அவன்கெட்டான், அவன் எப்போதும் பெண்சாதி பேச்சைக்கேட்டு நடப்பவன். அவள் நில் என்றால் நிற்பான். அவள் உட்கார் என்றால் உட்காருவான். அவன் ஒரு புருடனா" என்று இகழ்ச்சியாய்க்கூறுவதாலும் அவமானம் உண்டாகிறது.

ஆனால் இது சுலபமாய்ப் புருடனுக்குத் தெரிவதில்லை. ஏனெனில் ஒருவன்மனைவி கெட்டவளென்று ஒருவரும் அவள் கணவன் முன்மட்டும் கூறமாட்டார்கள். அதிலும் கொஞ்சம் செல்வவந்தனாயின் அதற்குமாறாய், "ஆ! அம்மா ரொம்ப நல்லவங்கொ. பத்தரைமாற்றுத் தங்கம். நீங்க நல்ல புண்ணியம் பண்ணபடியால்தான் அப்படிப்பட்ட மனைவிகிடைத்தது" என்று முகஸ்துதியாய்க் கூறிவிட்டு, பின்னால் மேற்கூறியபடி கேலிசெய்வார்கள். அதுநோக்கியே, நாயனார்,

"பெண்ணேவல் செய்யொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து"

என்று தமது குறளில் கூறியருளினார்.

இதன்பொருள், "ஸ்திரீயின் கட்டளைப்படி செய்துகொண்டிருக்கும் புருஷத்தன்மையைக்காட்டிலும், வெட்கத்தையுடைய ஸ்திரீயே பெருமையுடையவள்" என்பதாம். அதாவது ஸ்திரீயின்பேச்சைக்கேட்டு நடக்கும் புருஷன் ஸ்திரீயினும் இழிந்தவனாவான் என்பதே கருத்து.

ஆகையால் புருடன் மனைவியின் கட்டளைக்கு அஞ்சி நடக்காமலும், எல்லாக்காரியத்திலும் மனைவியின் அபிப்பிராயத்தைக்கேட்டு நடக்காமலும், தன் அபிப்பிராயத்திற்கும் கட்டளைக்கும் மனைவி கீழ்ப்படிந்து நடக்கும்படி ஆண்டுவருவானாயின் அவனுக்குப்பின்னால் வியாகுலமுண்டாகாதிருப்பதோடு மனைவிக்கும் கெட்டபெயர் உண்டாகாது.

புருடன் மனைவிக்கடங்கி நடப்பதும் மனைவி புருடனைத் தன் பிரியப் படிக்கே நடக்கும்படிச்செய்வதும் இருவருக்கும் அவமானத்தையே யுண்டாக்கும். அத்தகையமனைவியை யொருவரும் நல்லவளென்று கூறமாட்டார்கள். இது நம்மிருவர்க்குள்ளும் நடப்பதுதானே, பிறருக்கு எப்படித்தெரியும் என்று கருதலாகாது. இவர்கள் நடக்கையால் யாவர்க்கும் அச்சங்கதி சுலபத்தில் தெரிந்துவிடும். ஆனால் எதிரில் கூறமாட்டார்கள், தெரிந்ததாய்க் காட்டிக்கொள்ளவும் மாட்டார்கள். ஆனால் பின்னால் தாராளமாய்ப் பறை யறைவதுபோல் பேசிக்கொள்வார்களென்பது உண்மை. (தொடரும்)

# கற்பு

பெண்களுக்குக் கற்பாவது விவாகஞ்செய்யு முன் தாய்தந்தையராலும், விவாகஞ் செய்தபின் கணவனாலும் கற்பிக்கப்பட்டபடியே ஒழுகுதலாம். பெண்கள் இளமைப் பருவத்திலே பிதாவினாலும், யௌவனத்திலே கணவனாலும், மூப்பிலே புத்திரனாலும் காக்கத் தக்கவர். ஆகையால் ஒருபோதும் பெண்கள் சுவாதீனரல்லர்.

பிதா மாதாக்கள், பெண்ணுக்குச் சிறு பிராயத்திலே கடவுளுடைய குணமகிமைகளையும், புண்ணிய பாவங்களையும், சுவர்க்க நரக பலன்களையும், கடவுளை வழிபடு முறைமையையும், கணவனுக்குத் தொண்டு செய்யும் முறைமையையும் கற்பித்து, வீட்டு வேலைகளில் பயிற்றல் வேண்டும். பெண்களுக்குரிய தருமங்களெல்லாவற்றுள்ளும் "பதிவிரதா தர்மம்" முதன்மையானது. இதை நோக்கியே "குலமகட்கழகு கொழுநனைப் பேணுதல்" என்றார் ஆன்றோர்.

சூரியோதயத்துக்கு முன்னே நித்திரை விட்டெழுதல், கடவுளைத் தியானித்தல், வீடு விளக்கஞ் செய்தல், கணவனுடைய பணிவிடையைச் செய்தல், ஆகிய இவை முதலான செய்கைகளெல்லாம், மங்கல வாழ்க்கையையும் செல்வத்தையும் விரும்பிய நன் மனைவியின் செய்கைகளாம். நாடோறும் தன்நாயகன் உண்டபின் தானுண்ணுதலும், அவன் சயனித்தபின் தான் சயனித்தலும், அவன் நித்திரை விட்டெழுவதற்கு முன் தான் நித்திரை விட்டெழுதலும், அவன் கொடுத்த பொருளை வீணாகச் செலவழியாமையும், அவனோடு ஒத்திருத்தலும், அவனாணைப்படி நடத்தலும், கடுஞ்சொலின்மையும், இன்சொலுடைமையும், அவள் செய்கைகளாம்.

"கொழுநனுண்டபின் றானுகர் கொள்கையும்
விழிதுயின்றபின் றுஞ்சலுமென்றுயில்
லெழுதன் முன்ன மெழுதலுமேயன்றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே" **(காசிகாண்டம்.)**

மேலே கூறப்பட்ட பாட்டின் கொள்கைப்படி நடந்து வந்த திருவள்ளுவநாயனாரது பிரிய மனைவியாராகிய "வாசுகி" என்பவள் இறந்த காலத்தில் அவர் சொல்லியதாவது:—

"அடிசிற் கினியாளே யன்புடையாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என்றூங்கு மென்கணிரா"

ஸ்திரீ சாதியிற் பிறந்தவர்களுக்குப் "பதிவிரதை" யென்று சொல்லத்தகும் கற்பினையுடைய மாதர் பிரகாசிக்கின்ற நவரத்தினங்கள் இழைத்த பொன்னாலாகிய ஆபரணங்களைப் பூண்டு, இனிய உயிர்த்துணைவராகும் தம் கணவர்கள் உள்ளம் சந்தோஷிக்கும்படி அவர் முன் செல்வார். கணவன் தன்னைவிட்டு நீங்கிய காலத்தில் அணிந்திருக்கும் ஆபரணங்களெல்லாவற்றையும் நீக்கிச் சரீரத்தில் அழுக்கேறும்படி அழகு செய்யாதிருப்பர்.

"எரிமணிப் பொலம் பூண்சுமந் தின்னுயிர்க்
குரியகேள்வ ருவப் பமுன் னெய்துவார்
பிரியுங் காலையிற் பெய்கலன் யாவையும்
மொருவி மாசுட லுண்டிட வைகுவார்"
"நாளில்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
யாளில்லா மங்கைக் சழகு"

என்னும் ஔவைப் பிராட்டியார் திருவாக்கானு முணர்க.

கற்புடைய பெண்கள் தமது அன்பிற்குரிய கணவர் யாதொரு காரணத்தினாலாவது கோபங்கொண்டால் வெறுப்படைந்த மனதுடன் நேர்நின்று பதில் வார்த்தை சொல்லமாட்டார்கள்.

"இனிய கேழ்வர் முனியி னெதிர்நின்று
துணிகொ ணெஞ்சொ டெதிர்மொழி சொல்கிலா
ரனைய கேள்வரெ றியினு* மன்பொடு
கனிவர் நெஞ்சகங் கற்புடை மாதரே."

பதிவிரதை தன் வீட்டுக்கு வரும் துறவிகள் முதலிய பெரியோர்களையும், அதிதிகளையும், உபசரித்து அன்னங் கொடுப்பாள். நாயகனுடைய ஆயுள்பெருகும் பொருட்டு மஞ்சளணிதல் வேண்டும். தன் நாயகன் பெயரைச் சொல்லலாகாது. அவன் இருந்தாலன்றி அவனெதிரே தான் இருக்கலாகாது. அவன் உண்டு விட்டுவிட்ட மிகுதியாகிய உச்சிட்டத்தை அமுதம்போல உண்ணுவாள். தன் நாயகன் வீட்டுக்கு வரும்பொழுது அவனை முகமலர்ச்சியோடு எதிர்கொண்டு கைகால் கழுவச் சலங்கொடுத்து உபசரிப்பாள். நாயகன் ஏவு முன்னமே அவன் குறிப்பறிந்து நடப்பாள்.

தகாத வார்த்தை பேசல், தலைக்கடையிலே நிற்றல், பலகணி வழியாகப் பார்த்தல், சிரித்தல், பகலிலே நித்திரை செய்தல், காரியஞ் செய்யாமை, கட்டளையின்றிப் புறம்போதல், பொதுப்பெண்கள் போலப் பார்த்தல், தம்மை அழகுபெற அலங்கரித்தல், கூத்து முதலியவைகளைப் பார்க்க விரும்புதல், கணைக்காலுந் தனமுந் தெரிய ஆடை உடுத்தல், கூட்டத்தினுள்ளே புன்னகை செய்தல், ஆகிய இவை முதலாகிய செய்கைகளெல்லாம் ஸ்திரீ ஜாதிக்குத் தகாதனவாம். இவைகளினால் தம்தம் மரியாதையை இழக்கிறார்கள்.

(தொடரும்)

---

## கற்கோட்டை — நாவல்

(143-வது பக்கத் தொடர்ச்சி)

### 2-வது அத்தியாயம்

### அரியநாயகியின் வைரப்பதக்கமும் இராணியின் மனக்கலக்கமும்.

கமலாம்பாள் நமது தந்தையும் இராணியும் நாம்பேசியதைக் கேட்டார்களோ வென்று மனக்குழப்பமடைந்தாள். அதனால் அவர்கள் பேசியதில் ஒரு வார்த்தையேனும் அவள்செவியில் விழவில்லை. ஆனால் கண்ணனோ கமலாம்பா

---

* எறிதல்=அடித்தல், குத்தல், வெட்டல், உதைத்தல்.

ளிடம் ஏதோ பேசிக்கொண்டிருப்பதுபோல் அபிநயித்துக்கொண்டே செல்வ ராயரும் இராணியும் சம்பாஷித்தவற்றை ஒருவார்த்தைகூட விடாமல்கேட் டான். கேட்டதோடு அவற்றின்பொருளேயும் பூரணமாய்த் தெரிந்துகொண் டான். அவர்கள் சென்றதே அவன் கமலாம்பாளுடைய காத்தைப் பற்றிக் கொண்டு "இராணி கூறியவற்றைக்கேட்டாயா. யாவும் முடிவாய்விட்டது. என் மனேபீஷ்டத்தை யெப்படி வெளியிடுவதென்பது எனக்கு இப்போது தெரிந்தது. இனி நான் உன்னுடைய சொந்த சுத்தவீரனே. உன்பொருட் டாகவே நான் இனி உயிர்வைத்திருப்பது. ஆகையால் நான் முன்கேட்டபடி உன் அடையாளத்திற்காக உனது கூந்தலில் கொஞ்சம் கத்தரித்துக்கொடு என்சிகையில் கொஞ்சம் நான் தருகிறேன். இருவரும் அவற்றை யெப்போதும் மகாபத்திரமாய் வைத்துக்கொண்டிருக்கவேண்டும் அன்னியர் ஒருவர்க்கும் இந்த இரகசியத்தைக் கூறலாகாது" என்றான்.

தோட்டத்தில் இவர்களிருவரும் சந்தோஷமாய்ச் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் வீட்டிற்குள் திரும்பிச்சென்ற இராணியும் வர்த்தகரும் கூடத் திற்குச் செல்லும்போது இராணி தன்பின்னுல்வரும் தோழிகள் மந்திரிகள முதலியவர்களே வெளியிலேயே இருக்கும்படி கையாற்சமிக்கை செய்துவிட்டு கூடத்திற்குள்போய் உட்கார்ந்ததே செல்வராயர் "மகாராணியவர்கள் பிரியம் போல் அரியநாயகியென்ற கன்னிகையை அதாவது என்புதல்விக்கு உபாத் தினிபோன்றிருக்கிறவளே யழைத்துக்கொண்டு வருகிறேன். ஆனல் மஹா ராணியவர்களுக்கு முன்னடியே ஒரு வேண்டுகோள். அதாவது என்னல் அக்கன்னிகை தங்கள் கோபத்திற்கு ஆளாகும்படி நான் செய்யலாகாது" என்ருர்.

இராணி—"ஏன்? நான் ஏன் கோபிக்கவேண்டும்?" என்று புன்னகையோடு கேட்டாள்.

வர்த்தகர்—"மகாராணி யவர்களுக்கு உண்மையைக் கூறுகிறேன். என் னிடம் ஒரு முத்தாரம் இருக்கிறது. அத்தகைய முத்தாரம் எந்த அரசரிடமுமில்லே. அதை அக்கன்னிகையிடம்கொடுத்து தங்களுக்குக் காணிக்கையாய்ச் செலுத்த உத்தேசித்திருக்கிறேன்" என்ருர்.

இராணி—"இதற்காகவா! நான் கோபிப்பேன் என்று நினைக்கவேண்டாம்." என்ருள்.

உண்மையில் தன் குடிகளிடமிருந்து விலேயுயர்ந்த பொருள்களே யிலவச மாய்ப் பெறுவதென்ருல் கமலாபாய் இராணிக்கு மிக்க சந்தோஷமே.

வர்த்தகர் உடனேசென்று அரியநாயகி யென்னும் கன்னிகையை யழைத்துக்கொண்டுவந்து அரசியின் சமுகத்தில் நிறுத்தினர். அக்கன்னிகை மிக்க நாணத்தோடும் பயபக்தியோடும் அரசிக்குத் தாழ்மையாய் வந்தனம் புரிந்து தான் கையில்கொண்டுவந்த ஒரு அழகிய சிறுபெட்டியை அரசியிடம் கொடுத்தாள்.

அரசி யதை வாங்கிக்கொண்டு உள்ளத்தில் உவகையுற்று கன்னிகையை நோக்கி "ஆ, மிக்க சந்தோஷத்தோடு நான் இதை யேற்றுக்கொள்ளுகிறேன்" என்று கூறிக்கொண்டே அப்பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்த கெட்டிமுத்து வடத்தை வெளியிலெடுத்தாள். அந்த முத்துகளின் பருமனே யும் பிரகாசத்தையும் கண்டதே அரசியின்முகத்தில் அன்னே யறியாது சந்தோஷம் உண்டாகிவிட்டது. (அந்தோ இவ்வுலகில் சந்தோஷம் ஒரு நிலேயானதோ!) ஆனல் மறுநிமிடம் இராணியின் சந்தோஷம் அடியோடு மாறிவிட்டது. அவள் எதையோ கண்டவள்போல் திடுக்கிட்டு பிரமை யடைந்து இரண்டடி பின்னிடைந்தாள். அவள்முகத்தில் சொல்லொணுத

ஒருவிதவிசாரமுண்டாய்விட்டது. முகம் வெளுத்துவிட்டது. அரியநாயகி மிக்க பயமடைந்தாள். இவ்வளவிற்குங்காரணம் அப்பெட்டியின் அடியி லிருந்த ஒரு பதக்கமே. ஆனால் அரசியோ உடனே தன் மனதிலுண்டான குழப்பமனைத்தும் அடக்கிக்கொண்டு வர்த்தகரைநோக்கி, "சற்றுதயவுசெய்து எங்களைத் தனியேவிட்டு வெளியேசென்றிரும்" என்றாள்.

வர்த்தகர் அவ்வாறே வெளியிற்சென்றதே இராணி இரண்டு மூன்றடி முன்சென்று அரியநாயகியினருகில் நின்று அவள் அழகிய வதனத்தையுற்று நோக்கி, "குழந்தாய்! உன் வயதென்ன?" என்றாள்.

கன்னிகை, "இப்போது நான் பதினெட்டுமுடிந்தது" என்றாள். இதைக் கேட்டதே அரசியின் முகத்தில் இன்னும் அதிக ஆச்சரியமான மாறுதல் உண்டாயிற்று. ஆயின் அதை மறைத்துக்கொண்டு சற்று அதிகாரத்தோடு, "இக்குடும்பத்தில் எவ்வளவுகாலமா யிருக்கிறாய்?" என்றாள்.

கன்னிகை "மூன்றுவருடமாய்" என்றாள்.

அரசி உடனே அப்பெட்டியில் முத்துமாலையின் கீழிருந்த பதக்கத்தை யெடுத்து கன்னிகைக்குக்காட்டி, "இப்பதக்கம்! இது என் இதில் வைக்கப் பட்டது? உண்மையில் இதுவும் எனக்கு காணிக்கையாய் அளிப்பதற்காக வென்று எண்ணப்பட்டதல்லவே. இது உன்னுடையதாகவே இருக்க வேண்டும்," என்றாள்.

அரியநாயகி—"இப்பதக்கம் உண்மையாகவே என்னுடையது தான். ஆனால் இதை நான் இப்பெட்டியில் வைக்கவில்லை. உண்மையில் இது எப்படி இதில்வந்ததோ எனக்குத்தெரியாது" என்றாள்.

அரசி—இப்பெட்டியை யார் உன் கரத்திலளித்தது?

அரியநாயகி—தங்கம்மாள் தன் சகோதரர் கூறியபடிகொடுத்தாள். ஹா! இப்போது நினைப்பிற்கு வருகிறது.

அரசி—என்ன வருகிறது. கூறு.

கன்னிகை—நான் என்னறையிலிருக்கையில் தங்கம்மாள் இப்பெட்டியோடு வந்து முத்துமாலையை நான் தங்களுக்கு அளிக்கவேண்டியதைப்பற்றி கூறினாள். அரசியின் சமுகத்தில் செல்லும்போது சரியாய் அலங்கரித் துச் செல்லவேண்டுமென்று என்நகைப்பெட்டி திறக்கப்பட்டு அதிலி ருந்த நகைகள் யாவும் அவசரத்தில் வெளியிலெடுத்து வைக்கப்பட்டன. இப்பெட்டியையும் திறந்து அந்தம்மாள் முத்துமாலையை யெடுத்து எனக்குக்காட்டினாள். நான் வேண்டிய நகைகளை யணிந்துகொண்ட பின் மறுபடி பெட்டிகள் மூடப்பட்டபோது கலவரத்தால் இப்பதக்கம் இப்பெட்டியில் தவறாய் வைக்கப்பட்டிருக்கலாம்" என்றாள்.

அரசி—"அப்படித்தான் இருக்கும். ஆம். ஆம். ஆயினும் இது ஒருமாதிரி பதக்கம். உனக்கு இதன்மேல் மிக்க பிரியம்போலும்" என்றாள்.

கன்னிகை—ஆம் மஹாராணி. இதை நான் மிக்க அருமையோடும் அன் போடும் பாதுகாத்து வருகிறேன். இதுஒன்றே யென்தாயின் அடை யாளமாயிருப்பது.

இதைக்கேட்டதே அரசி அப்பதக்கத்தை நன்றாய்ப் பார்ப்பவள்போல் சாளரத்தின் பக்கமாய் முகத்தை முழுதும் திருப்பிக்கொண்டு சற்றுநேரங் கழித்து "உன்தாய் இறந்துபோய் எவ்வளவு காலமாகிறது" என்றாள்.

கன்னிகை—எனக்குச் சுமார் நான்கு வயதிருக்கையில் என்தாய் மரணமடைந் தார்கள்.

இராணி—பிறகு உன் தந்தை?

**கன்னிகை**—"என் தந்தை யென்னை வெளிநாட்டிற்குக் கொண்டுபோய் விட்டார். நாங்கள் சிலகாலம் பாதாளபுரியில் வசித்திருந்தோம். அந்தோ! பிறகு என் தந்தையும் திடீரென்று இறந்துபோனார். மரணத்தருவாயில் என்னிடம் என்னமோ கூற முயன்றார். ஆனால் பேசமுடியவில்லை" என்று கண்ணீர்விட்டுக்கொண்டே கூறினாள்.

அரசி அவளை யன்போடு தட்டிக்கொடுத்து, இந்தா உன்பதக்கம். இதை நான்முன் எப்போதோ பார்த்ததுபோல் இருந்தது. ஆயினும் இதல்ல. பாபம் உன்தந்தை பாதாளபுரியிலா இறந்தார்?" என்றாள்.

**கன்னிகை**—ஆம் அரசியே. அது ஆறு ஏழு வருடங்களுக்குமுன் நடந்தது.

**அரசி**—பிறகு நீ என்ன செய்தாய். என்னிடம் பேசப்பயப்படாதே. நான் என் குடிகளுக்கெல்லாம் தாயல்லவா. உன் விஷயத்தில் நான் மிக்க பரிதாபப்படுகிறேன்.

**கன்னிகை**—என் தந்தை யிறந்தபின் குழந்தைப் பருவமுதல் என்னை வளர்த்துவந்த செவிலித்தாய் என்னை தீர்த்தக்கரை நகரத்திற்கழைத்து வந்தாள். அந்தவிடத்தில் தங்கம்மாள் என்னைச் சந்தித்து என்னைக் கொண்டுபோய் ஒருபாடசாலையில் விட்டார்கள். பிறகு மூன்று வருடங்களுக்கு முன்பு வந்து என்னையிங் கழைத்துவந்துவிட்டார்கள். அது முதல் இங்கேயே யிருக்கிறேன்.

**அரசி**—நீ கடவுள் தயவால் நல்ல செல்வவந்தர் குடும்பத்திலிருக்கிறாய். ஒரு விசனமுமில்லை. மேலும் நல்ல அழகும், கல்வியும், அறிவும் குணமும் உடையவளாகவே தெரிகிறது. அடிக்கடி செல்வவந்தர் சபைகளில் நடமாடுவாய். ஆகையால் அனேகர் உன்னை மணம்புரிய விரும்பி யிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**அரியநாயகி**—இல்லையில்லை. நான் இதைவிட்டு வர்த்தகருடைய நகரமாளிகைக்குக்கூட செல்கிறதில்லை. ஆயினும் என்னேரமும் கமலாம்பாளுக்குக் கல்விமுதலியவை கற்பிப்பதும் அவளோடு விளையாடுவதுமாய் என் காலம் சந்தோஷமாகவே கழிகிறது.

**அரசி**—"சேசே! ஆயினும் இதுஒழுங்கல்லவே. உன்போன்ற அழகிய கன்னிகை இஷ்டப்படி தக்கவர்கள் கூட்டங்களுக்குச்சென்று பழகி அவர்களோடு அறிமுகமாகவேண்டும். நீ யப்படிச் செய்யாமல் சிறையிலிருப்பதுபோல் இருப்பதற்கு ஏதோ காரணமிருக்கவேண்டும். என்னிடம் எதைக்கூறவும் பயப்படாதே. இப்போது என்னை அரசியென்று எண்ணாமல் உன் அன்பார்ந்த சினேகியென்று நினைத்துப் பேசு" என்றாள்.

இராஜாத்தி யிவ்வளவு மெய்யன்புடையவள்போல்பேசவே அரியநாயகி, "அம்மா! இவ்வளவு அன்பான தங்களிடம் எந்த இரகசியத்தையும் கூறப் பின்னடையலாமோ. தாங்கள் கருதியதுபோல் நான் வெளியிற் செல்லாமலிருப்பதற்கு இரகசியமானகாரணம இருக்கிறது. அதாவது என்தந்தையின் முதல்மனைவிக்குப் பிறந்த புத்திரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எனக்கு அரைச்சோதரராகவேண்டும். அந்தோ! என்தலைமேல் இன்னொரு அவமானம் இருக்கிறது. என் தாய் என் தந்தையின் மனைவியல்ல. ஆயினும் நான் அவள் விஷயத்தில் பூரண அன்புடையவளாகவே யிருக்கிறேன். என் பிறப்பில் பலமர்மங்களிருக்கின்றன. அச்சகோதரர்கள் யாரென்று எனக்குத் தெரியாது. ஆகையால் நான் தாராளமாய் வெளியிற்சென்று யாவரோடும் கலந்து அறிமுகமாகிக் கொண்டிருந்தால் ஒருசமயம் நானும் மேற்படி சகோதரர்களில் ஒருவரை யொருவர் அறிமுகமாகிக் காதலராய்விட்டால்,

இருவரும் ஒரே தந்தைக்குப் பிறந்தவர்களானதால், அந்தோ, விபரீதமாய் முடியுமே. அந்தபயத்தால்தான் நான் இங்கேயேயிருப்பது" என்றாள்.

அரசி—"ஆம் ஆம். நீ கூறுவது உண்மையே. ஒன்று கேட்கிறேன். உன்பிறப்பைப்பற்றி மர்மம் எப்போதும் வெளிவாராத இரகசியமாகவே வா கருதப்படுகிறது?"

அரியநாயகி—எனக்குப் பதினெட்டாவது வயது வந்ததினம் தங்கம்மாள் அதைப்பற்றி யென்னிடம் உறுத்திப்பேசினாள். தான் வேண்டுமாயின் அந்த இரகசியத்தை வெளியிடக்கூடுமென்றும், ஆயினும் நான் அதை யறிந்துகொள்ள அதிக ஆவலுள்ளவளா யிருக்கலாகாதென்றும் ஏனெனில் அதை யுணர்வதால் என் மனோவியாகுலம் அதிகமாகுமே யன்றிச் சந்தோஷ முண்டாகாதென்றும் கூறினாள். கடைசியில் எதற்கும் எனக்கு உலக அனுபவம் போதுமான வரையில் உண்டாகி என் அறிவு முதிர்ச்சி யடையுமட்டும் நான் பொறுமையா யிருப்பது நலமென்று கூறினாள். ஆனால் அவள் கூறிய இரகசியம் இன்னதென்று சற்றேனும் எனக்குத் தெரியாது. நானும் அந்தம்மாள் கூறியது போலவே அதையறியச் சற்றேனும் ஆத்திரப்படாமல் பொறுமையாகவே இருந்து வருகிறேன்" என்றாள்.

இராணி—"ஆ! நீ பேசப்பேச எனக்கு உன் விஷயத்தில் அதிகப் பரிதாபமும் அன்பும் உண்டாகின்றன. உன் வார்த்தைகளால் நீ நல்ல பெருந்தன்மையான குணமும் மூத்தோர் சொற்படி நடக்கும் வணக்கமும் நுண்ணறிவு முடையவளென்று தெரிகிறது. ஒரு சமயம் அந்த இரகசியம் வர்த்தகருக்கும் தெரிந்திருக்கலாம்" என்றாள்.

கன்னிகை—"இல்லை யில்லை. எனக்குத் தெரிந்த அவ்வளவு கூட வர்த்தகருக்குத் தெரியாதென்று நான் நிச்சயமாய்க் கூறுவேன். தான் ஒரு பிராணி தவிர வேறு ஒருவருக்கும் அந்த இரகசியம் தெரியாதென்று தங்கம்மாள் எனக்குக் கூறியிருக்கிறாள். அந்தம்மாளுக்கு எப்படித் தெரிந்ததோ நானறியேன். பெரும்பாலும் என்னை வளர்த்த செவிலித்தாய் கூறியிருக்கலாம். அவள், பாபம், நான் பாடசாலையில் விடப்பட்ட இரண்டொரு வருடங்களில் இம்மண்ணுலக வாழ்க்கையை விட்டொழிந்தாள். அவள் தான் எல்லா இரகசியமும் கூறியிருக்கலாகும்" என்றாள்.

இராஜாத்தி கன்னிகையை யருகிலழைத்து, "என் பிரியமுள்ள சினேகியே! உன் விஷயத்தில் நான் மிக்க பரிதாபப்படுகிறேன். உன் நற்குணத்திற்கும் அறிவின் நுட்பத்திற்கும் மிக்க சந்தோஷமடைகிறேன். இப்படிப்பட்ட கன்னிகை கமலாம்பாளுக்கு உபாத்தினியா யிருப்பதைப் பற்றி மிக்க சந்தோஷமடைகிறேன். இன்னொன்று கூறுகிறேன். அதாவது எந்த சமயத்திலாவது உனக்கு என்னால் ஏதாவது உதவி வேண்டியதாயின் இராணியென்றெண்ணியாயினும் சரி, சினேகி யென்றெண்ணியாயினும் சரி தடுமாற்றமின்றி என்னை வந்து கேள்" என்று கூறும்போது அரியநாயகி இராணியின் முன் முழங்காலிட்டுப் பணிந்து தன் நன்றியறிதலை வெளியிட்டுக் கொண்டாள்.

இராணி யவளை யன்போடெடுத்து தாடைமேல் தடவிக் கொடுத்து, வேண்டாம் வேண்டாம். நீ யென் அன்பிற்குரியவளாயிருப்பதால்தான் நான் உன் விஷயத்தில் அன்பு பாராட்டுகிறேன். நாம் பேசிய விஷயங்கள் ஒன்றையும் வர்த்தகரிடம் கூறாதே. இனி நீ போகலாம். ஆ! இன்

ஞெரு சங்கதி, தங்கம்மாளிடம் கூறிப் போஜனம் சீக்கிரம் பரிமாறும்படி ஏற்பாடு செய்யச் சொல். ஆயத்தமானதே அந்தம்மாளேயே யென்னிடம் வந்து சங்கதி தெரிவிக்கும்படி கூறு என்றாள்.

அரியநாயகி இராணியை விட்டுப் புறப்பட்டதே கூடத்தில் ஆவலோடு தனக்காகக் காத்துக்கொண்டிருக்கும் வர்த்தகரைக் கண்டாள். இராணி என்ன கூறினளென்று அவர் கேட்டதற்கு கன்னிகை இராணி கூறியபடி யாவற்றையும் வெளியிடாமலும், பொய்யும் கூறாமலும் பக்குவமாய் அவருக்குத் திருப்தியாகும்படி விடையளித்தாள். பதக்கத்தைப் பற்றி மட்டும் இராணி கூறியபடி கூறினள். வர்த்தகர் “ஆம், ஆம். இராணியின் தாயாரிடம் அம்மாதிரி பதக்கம் இருந்திருக்கும்” என்றார்.

(தொடரும்)

---

## பயிரிடுவோர் பழகவேண்டிய பழமொழிகள்.

1. ஆடி ஒருகுழி அவரைபோட்டால் கார்த்திகை ஒரு சட்டி கறி
2. ஆழ உழுதாலும் அடுக்க உழு
3. வேலியிட்டு வெள்ளாமையிடு
4. ஆடிப்பட்டம் தேடிவிதை
5. ஆடிப்புழுதி ஆவணிசேறு
6. நடவுக்குத்தூவல் நாலத்தொருபங்கு
7. நீர்பெருத்தால் நெல்சிறுக்கும்
8. தண்ணீரில்லாத வெள்ளாமையும் தானுழாத நிலமும் தரிசு
9. உழுகிறநாளில் ஊர்விட்டுப் போனால் அறுக்கிறநாளில் ஆள்தேடவேண்டாம்.
10. ஐப்பிசி மாதத்தில் நடவு நட்டால் ஆனைக்கொம்பு விழும்.
11. முடிமுடியாய் நட்டால் கோட்டை கோட்டையாய் விளையுமா.
12. களையெடுக்கான் கபோதி
13. குடி உயர முடி உயரும்
14. மாறி தென்றலடித்தால் மாட்டைவிற்று ஆட்டை வாங்கு
15. யாருக்கிடமானாலும் மாரிக்கிடமாகாது

(வரும்)

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

நளஅஹு ஐப்பசிமீ சாலிவாகன 1838, கலியுகாதி 5017,

பசலி 1325-26, கொல்லம் 1091-92,

இங்கிலீஷ் 1916-மஹு அக்டோபர்—நவம்பர்மீ

| அக்டோபர் | ஐப்பசிமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | செ | சஷ்-22-35 | திரு-60-0 | மர 60 | பசுக்களை வாங்க |
| 18 | 2 | புத | சப்-24-11 | திரு-1-27 | சித்த 60 | பூமுடித்தல் |
| 19 | 3 | வி | அஷ்-29-23 | புன-6-24 | அமி 60 | கன்று காலிகள் வாங்க |
| 20 | 4 | வெ | நவ-34-33 | பூச-12-47 | மரண-60 | 4-க்குள் மழை |
| 21 | 5 | ச | தச-39-8 | ஆயி-18-53 | மர 19 அ | ஜெபம் பூர்த்திசெய்ய |
| 22 | 6 | ஞா | ஏகா-43-2 | மக-24-19 | மர 24 சி | கரிநாள் |
| 23 | 7 | தி | துவா-45-59 | பூர-28-52 | சித்த 60 | 9-க்குள் மழை |
| 24 | 8 | செ | திர-47-29 | உத்-32-14 | சித்த 60 | நாமகரணம் |
| 25 | 9 | புத | சது-47-49 | அஸ்-34-19 | மர 34 சி | தீபாவளி |
| 26 | 10 | வி | ● அமா46-55 | சித்-35-13 | சி 35 அமி | கேதார கௌரி விரதம் |
| 27 | 11 | வெ | பிர-44-47 | சுவா-34-56 | சித்த 60 | சேசகண்டணம் |
| 28 | 12 | ச | துதி-41-31 | விசா-34-40 | சித்த 60 | |
| 29 | 13 | ஞா | திரி-37-30 | அநு-32-22 | மர-60 | வாசற்கால் வைக்க |
| 30 | 14 | தி | சது-32-39 | கேட்-27-10 | சித்த 60 | சூளைபோட |
| 31 | 15 | செ | பஞ்-27-17 | மூல-24-44 | அமி 25 சி | புதுப் பசுக்கள் கட்ட |
| நவம்பர்மீ 1 | 16 | புத | சஷ்-21-32 | பூரா-20-46 | அமி 60 | ஸஷ்டி விரதம் |
| 2 | 17 | வி | சப்-15-51 | உத்-17-24 | சித்த 60 | நிஷேகம் |
| 3 | 18 | வெ | அஷ்-9-49 | திரு-12-38 | மர 13 சி | பும்ஸவனம் |
| 4 | 19 | ச | நவ-4-6<br>தச-54-42 | அவி-8-45 | சித் 54 அ | வாகனம் யேற |
| 5 | 20 | ஞா | ஏகா-54-8 | சத-5-25 | மர 5 சித் | கரிநாள் |
| 6 | 21 | தி | து-51-28 | பூர-2-36<br>உத்-56-51 | மர 3 சித் | புதுவியாபாரம் செய்ய |
| 7 | 22 | செ | திர-47-31 | ரேவ-59-29 | சித்த 60 | புது அடுப்புபோட |
| 8 | 23 | பு | சது-45-49 | அசு-59-33 | மர 59 சி | |
| 9 | 24 | வி | ○ பௌள45-16 | பர-60-0 | சித்த 60 | கமுகு தென்னை நட |
| 10 | 25 | வெ | பிர-45-57 | பர-0-58 | சித்த 60 | கிருத்திகை விரதம் |
| 11 | 26 | ச | துதி-48-0 | *கார்-3-30 | அமி 60 | புது எருதுகளை ஏரில் உழ |
| 12 | 27 | ஞா | திரி-51-8 | ரோக-7-18 | சித்த 60 | சமஸ்தாபரணம் தரிக்க |
| 13 | 28 | தி | சது-55-17 | மிரு-11-47 | சித்த 60 | வாகனம் வாங்க |
| 14 | 29 | செ | பஞ்-60-0 | திரு-17-52 | மர 18 சித் | பசுக்களை வாங்க |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS